Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 287 | சனிக்கிழமை | ஆவணி 25 ஆம் நாள் 11 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## சமல் ராஜபக்சவுக்கு கொரோனா

கொழும்பு, செப். 11

நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவுள்ள சமல் ராஜபக்சவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-4)

# செப். 21 வரை ஊரடங்கு நீடிப்பு

### சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, செப்ரெம்பர் 11

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை செப்ரெம்பர் 21 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனா ஒழிப்பு செயலணியின் வாராந்தக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. 15 ➤

## 21ஆம் திகதிக்குப் பின் எப்படி செயற்படுவது?

### அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி!



கொழும்பு, செப். 11

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி தளர்த்துவதாக இருந்தால் அதன் பின்னர் விதிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் மற்றும் 15 ➤

## யாழில் 6 பேர் சாவு 191 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாண மாவட்டத்தில் 191 பேருக்கு நேற்றுக் கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 18 தொற்றாளர்களும் அன்டிஜென் பரிசோதனையில் 173 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 ➤

## நாட்டில் 131 பேர் சாவு 2,832 பேருக்குத் தொற்று

கொழும்பு, செப். 11

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 832 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 80 ஆயிரத்து 468 ஆக எகிறியுள்ளது என்று அரச தகவல் 15 ➤

## வவுனியா மாவட்டத்திலும் 6 பேர் தொற்றால் சாவு

வவுனியா,செப்.11

கொரோனாத் தொற்றால் வவுனியாவில் நேற்று 6 பேர் உயிரிழந்தனர்.

குறித்த நபர்களில் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத்தொற்று 15 ➤

### பி.எச்.ஐ. உட்பட

## அரச அலுவலர்கள் பலருக்கு முல்லைத்தீவில் கொரோனா

முல்லைத்தீவு, செப். 11

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். 13 ➤

## ஐ.நாவுக்கு சம்பந்தன் அனுப்பிய கடிதத்தில்-

## புலிகளின் போர்க்குற்றம் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லையாம்!

### சத்தியம் செய்கின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், செப்.11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கூட்டமைப்பின் சார்பில் 15 ➤

## புலிகளின் போர்க்குற்ற விவகாரம் இருந்ததை, சுமந்திரனே எமக்கு உறுதிப்படுத்தினார்!

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும் என்று இரா.சம்பந்தன் ஐ.நாவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்பதை 15 ➤

## இரட்டைக் குழந்தைகளைப் பெற்ற இளம் தாய் கொரோனாவால் சாவு

யாழ்ப்பாணம், செப். 11

இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த இளம் தாய் ஒருவர், கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள் ளார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இணுவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தநிலையில், 15 ➤

## மகனைத் தேடிய தந்தை நேற்றுக் காலமானார்



வவுனியா, செப். 11

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனுக்கு நீதி கேட்டுப் போராடிவந்த தந்தையொருவர் நேற்றுக் காலமானார்.

வவுனியா மதியாமடு, புளியங்குளம் 13 ➤

## மயங்கி வீழ்ந்த பெண் சாவு

### மீசாலையில் சம்பவம்

கொடிகாமம், செப். 11

கோவிலுக்குச்சென்ற குடும்ப பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்தநிலையில், சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் 13 ➤

## விசாரணை நடத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது!

### ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதத்தில் விக்கி சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், செப். 11

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்தும் தமிழர்களுக்கு எதிராக சித்திரவதையையும் பாலியல் வன்புணர்வையும் மேற்கொண்டு 13 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மருத்துவமனையில் தேங்கும் கொரோனாச் சடலங்கள்

**யாழ்ப்பாணம், செப். 11**

**பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை குளிரூட்டியில் வைத்துப் பேணமுடியாமையால் சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன. அதனால் பல நெருக்கடிகளை எதிர்கொள்வதாக மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் வே.கமலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மருத்துவமனையில் கடந்த மே மாதம் 17ஆம் திகதி கொரோனா நோயாளர் விடுதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 556 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைபெற்றுள்ளனர். அவர்களில் 21 பேர் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளனர். 20 பேர் வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்துள்ளனர்.

பிரேத அறையில் 6 சடலங்களையே குளிரூட்டியில் வைத்து பாதுகாக்கக்கூடிய வசதிகள் உள்ள நிலையில் இன்றைய நிலைவரப்படி 11 சடலங்கள் காணப்படுகின்றன. எதிர்வரும் நாள்களில் உயிரிழப்பு ஏற்பட்டால் சடலங்களை பாதுகாப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

பருத்தித்துறை மருத்துவமனையில் கொரோனாவால் இறப்பவர்களின் சடலங்களை கோம்பயன் மணல் மயானத்துக்கு கொண்டு செல்வதற்கான, போக்குவரத்து செலவுகள் உள்ளிட்டவற்றை பொறுப்பேற்க தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் முன்வந்துள்ளார்.

அதேவேளை, உயிரிழந்தவர் பொருண்மியம் நலிந்த குடும்பத்தைச்சேர்ந்தவரெனில் மின் தகன செலவுகள் உள்ளடங்கலாக அனைத்து செலவுகளையும் தான் பொறுப்பேற்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவற்றை நாம் நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் ஊடாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அதேவேளை, சுகாதாரப் பிரிவினரின் பரிந்துரையின்படி வீட்டில் உயிரிழப்போர் தொடர்பில் மருத்துவமனைக்கு அறிவித்தால், அது தொடர்பிலான போக்குவரத்து செலவுகளுக்கான நடவடிக்கைகளையும் மருத்துவமனை பொறுப்பெடுக்கும். இவற்றுக்கான நிதியை நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் ஊடாக, தியாகி அறக்கொடை நிதிய நிறுவுநர் வழங்க முன்வந்துள்ளார்.

இதுதவிர, மக்கள், தமக்கு சளி, தடிமன், காய்ச்சல் உள்ளிட்ட அனைத்து நோய்களுக்கும் பயமின்றி மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் மருத்துவ தேவைகளுக்கு மருத்துவமனையின் பொது தொலைபேசி இலக்கங்களான 021 226 32 61 மற்றும் 021 226 32 62 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்புகொள்ள முடியும். - என்றும் தெரிவித்தார். (த-26)

# தடுப்பூசி போடுமிடத்தில் தொற்றுக்கு இடமளியாதீர்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

வவுனியா, செப். 11

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியில் இடம்பெற்று வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டால் புதிய கொரோனாக் கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் 81 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்று கடந்த மூன்று நாள்களாக இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியில் வவுனியா வடக்கு, தெற்கு வலயங்களை சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முற்பகல் 9 மணி முதல் இடம்பெறும் என்று வலயக்கல்வி பணிமனையால் அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கல்லூரிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் காலை 07.30 மணி தொடக்கம் வந்தவண்ணம் இருந்தனர்.

அதனால் பாடசாலை முன்பாக 350 க்கும் மேற்பட்டவர்கள் குழும வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

வவுனியாவில் அண்மைக் காலமாக கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றநிலையில், வவுனியா மாவட்டத்தில் 45 பேர் வரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-110)

# ரஷ்யாவிலிருந்து மேலும் தடுப்பூசி

கொழும்பு, செப். 11

ரஷ்யாவிடமிருந்து அடுத்தவாரம் மேலும் ஒரு தொகை ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். முதலாவது டோஸாக இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸாக இவை செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-4)

# கொரோனாச் சாவு அதிகரிக்க ராஜபக்ச அரசே காரணகர்த்தா

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு. செப். 11

கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடையவும், கொரோனாச் சாவுகள் உச்சமடையவும் ராஜபக்ச அரசே முழுப்பொறுப்பு என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ் சாட்டினார்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான ஒருதொகை பாதுகாப்பு அங்கிகள், ஔடதங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்களை, வெளிநாட்டிலுள்ள நண்பர்களது ஒத்துழைப்பில் நாட்டிலுள்ள பிரதான மருத்துவமனைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களிடம் நேற்று கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளுக்கு குறித்த உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

விசேடமாக கொழும்பு தேசிய மருத்துவமனை, ஐ.டி.எச்., கராப்பிட்டிய பொது மருத்துவமனை, நாகொடை பொது மருத்துவமனை, பதுளை, கண்டி பொது மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை, இரத்தினபுரி, அநுராதபுரம், குருநாகல் ஆகிய பிரதான மருத்துவமனைகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டுக்குள் ஊடுருவி ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. இந்தத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவற்கு ராஜபக்ச அரசு முனைப்புடன் செயற்படவில்லை. தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் அத்தியாவசிய சுகாதாரத்துறைக்குத் தேவையான சலுகைகள், உபகரணங்கள் பெற்றுக் கொடுப்பதை கைவிட்டுவிட்டு அரசு செயற்படுகின்றது. அத்தியாவசிய உபகரணங்கள், ஔடதங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் முறையான செயற்றிட்டங்கள் இல்லை. எனவே, சுகாதாரத் துறையினரும் தொற்றுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது" என்றார். (த-22)

# அவசரகாலச் சட்டத்தை மீளப்பெறவேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு.செப்.11

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், எந்தவொரு உணவுப் பொருள்களினதும் விலையும் குறைக்கப்படவில்லை. எனவே அதனை மீளப்பெறுவதே தற்போதுள்ள பொருத்தமான நடவடிக்கையாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்ற போர்வையில் நிறைவேற்றப்பட்ட அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தத் தவறியது தற்போதைய அரசின் பெரும் பலவீனமாகும்.

1978 ஆம் ஆண்டு சூறாவளி ஏற்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், சுனாமி ஏற்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அவசர கால விதிமுறைகளைப் பிரகடனப்படுத்தி மக்களுக்கு நன்மைகளைச் செய்திருந்தனர். எனினும், கொரோனா நிலைமையின் போது ராஜபக்ச அரசு இந்தச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளது. இதனால் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் பெறவில்லை. என்றார். (த-4)

# மாலைதீவின் புதிய தீவுக்கு கிழக்கிலிருந்து மண் அகழ்வா?

## உடன் விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு,செப்.11

கிழக்கு மாகாணத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பில் சுயாதீன விசாரணை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், மாலைதீவுக்கு விற்பனை செய்வதற்காக கிழக்கு மாகாணத்தில் இருந்து மணல் அகழப்படுகின்றது என்று கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றில் தெரிவித்தார். மாலைதீவில் தீவு ஒன்றை அமைப்பதற்காக இந்த மணல் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு, அந்த அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, மாலைதீவிலுள்ள தீவை நிரப்புவதற்கு இலங்கையில் இருந்து மணல் அனுப்பப்பட்டுள்ளமை நிரூபிக்கப்படுமாக இருந்தால் அமைச்சுப் பதவியிலிருந்து மாத்திரமின்றி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகத் தயார் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹிந்த குழுவினர் இத்தாலி பயணம்!

கொழும்பு, செப். 11

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று அதிகாலை இத்தாலிக்குப் பயணித்தனர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட குழுவினர் பிரதமருடன் பயணித்துள்ளனர். பிரதமர் ஜி20 சர்வமத மற்றும் கலாசார மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றவுள்ளதுடன், இராஜதந்திர சந்திப்புக்களிலும் கலந்து கொள்ளவுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-4)

கட்டுப்பாட்டு விலையில் பொருள்களைப் பெற

# பின்தங்கிய கிராமங்களுக்கு நடமாடும் சேவை அவசியம்

## மன்னார் கிராமப்புற மக்கள் கோரிக்கை

மன்னார், செப்.11

**மன்னார் மாவட்டத்தில் நடமாடும் சேவை மூலம் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலையில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது, மன்னார் மாவட்டத்தில் சதொச மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கின்றன.

ஆயினும் பின்தங்கியுள்ள கிராமப்புற மக்களுக்கு அங்கு சென்று கொள்வனவு செய்யும் வாய்ப்புக் கிடைப்பதில்லை.

உதாரணமாக மிகப் பின்தங்கிய பகுதியான மாதா கிராமத்தில் 200க்கும் அதிகமான குடும்பங்கள் வசிக்கின்றன. அங்கு ஓரிரு கடைகளே உள்ளன. சதொச விற்பனை நிலையமோ, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையமோ இல்லை.

அந்தப் பகுதி மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமானால் 20 மைல் தூரத்தில் உள்ள முருங்கனுக்கே செல்ல வேண்டும்.

இவ்வாறு பல கிராமங்கள் உள்ளன. இந்த இக்கட்டான காலகட்டத்தில் வாரத்தில் ஒரு முறையாவது நடமாடும் சேவைகள் மூலம் அரசு அறிவித்துள்ள கட்டுப்பாட்டு விலைகளில் அத்தியாவசியப் பொருள்களை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (எ-60)

# தென்மராட்சியில் மூதாட்டி கொரோனாவால் மரணம்!

தென்மராட்சிப் பிரதேசத்தில் மூதாட்டி ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். மீசாலையில், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 76 வயதான இந்த மூதாட்டி நேற்றுமுன்தினம் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் உள்ளவர்கள் தனிமைப்படுத்தலில் உள்ள நிலையில், நேற்று சுகாதார அதிகாரிகள் அலுவலகத்துக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டபோது மூதாட்டிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து சடலத்தை சுகாதார நடைமுறைகளின் கீழ் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் சுகாதாரப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது. (எ-9-156)

# மன்னாரில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று!

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 11 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது 445 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 11 பேர் இனங்காணப்பட்டனர். மன்னார் மாவட்டத்தில் இதுவரை தொற்று ஆயிரத்து 860ஆக உயர்ந்துள்ளது. செப்ரெம்பர் மாதத்தில் 176 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மன்னார் மாவட்டத்தில் இதுவரை 22 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 28 ஆயிரத்து 616 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. -என்றார். (எ-60)



# விவசாயக் காணிகள் பறிபோகும் அபாயநிலை

## எல்லைக் கற்களை நட்டது வனவளத் திணைக்களம்

கிளிநொச்சி, செப். 11

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு குளத்தை அண்டிய பகுதிகளில் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், அந்தக் காணிகளில் வனவளத் திணைக்களத்தினர் எல்லைக் கற்களை நடுகை செய்துள்ளனர்.

இதனையடுத்து பொதுஅமைப்புக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் நேரடியாகச் சென்று நிலைமையைக் கண்காணித்தனர்.

குளத்தின் நீரேந்துப் பகுதிகள் மற்றும் குளத்தின் கீழ் நீண்ட காலமாகப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த விவசாயக் காணிகள் இவ்வாறு எல்லையிடப்பட்டுள்ளன.

பிரமந்தனாறு குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள நடுத்தரக் குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இங்கு 915 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 650 மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பெரும்போகம் மற்றும் சிறுபோகப் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் வனவளத் திணைக்களத்தினர் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளத்தின் நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் குளத்தின் கீழான பொதுமக்களின் வயல் காணிகள் மற்றும் குளத்தின் வான் பகுதி என்பவற்றை வனப்பகுதிகளாக அடையாளப்படுத்தி, எல்லைக்கற்களை நடுகை செய்துள்ளனர். (ம-4-113)



# அக்கராயன் கூ.சங்கத்துக்கு உழவு இயந்திரம் கையளிப்பு

கிளிநொச்சி, செப். 11

அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், மீன்பிடித்துறை அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இந்த உழவு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அக்கராயன் கமநலசேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் பார்த்தீபன், உழவு இயந்திரத்தை அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார். (ம-4-13)

# முஸ்லிம் மக்களால் 1,000 உணவுப் பொதி

யாழ்ப்பாணம், செப். 11

வெளிநாட்டில் உள்ள மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களின் நிதிப்பங்களிப்பில், சமைத்த உணவுப் பொதிகள் யாழ். மாவட்டச் செயலரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

190 ரூபா பெறுமதியான ஆயிரம் சமைத்த உணவுப் பொதிகள் மருத்துவமனை வீதி பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டன.

போரால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் 19 நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு வழங்கவென பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இந்தப் பொதிகளைக் கையளித்தனர்.

மாவட்டச் செயலர் க.மகேசன் மற்றும் மேலதிக செயலர் முரளிதரன் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ஆகியோர் பொதிகளை கையேற்றனர். (ம-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலால் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு!

## வங்காலை மீனவர்கள் விசனம் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**மன்னார், செப். 11**

**இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறல்களால் தங்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் வங்காலை மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது, கடந்த இரு ஆண்டுகளாக நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்று நிலைமை காரணமாகவும், இலங்கைக் கடற்பரப்பில் தீப்பிடித்து கப்பல் மூழ்கியதாலும் உண்டான பாதிப்புகளால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருந்தது.

இப்போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நாகர்கோயில், இராமேஸ்வரம் பகுதியில் இருந்து 200க்கும் அதிகமான இழுவைப்படகுகளில் வரும் இந்திய மீனவர்கள் வங்காலைக் கடற்கரையில் இருந்து 11 கிலோமீற்றர் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

எமது கடல் வளத்தை அள்ளிச் செல்லும் நிலையில், எமது பெறுமதி மிக்க வலைகளையும் அறுத்துச் செல்கின்றனர்.

இதனால் எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ஒவ்வொரு மீனவக் குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை இலங்கைக் கடற்படையினர் கண்டும் காணாதது போன்று இருக்கின்றனர்.

கடற்றொழில் அமைச்சோ அல்லது அரசோ இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாம் வாழ்வாதா? சாவதா? என்று தெரியாத நிலையில் இருக்கின்றோம்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.- என்றனர். (எ-213)

## ஜெனிவாவுக்கு சைக்கிள் போராட்டம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான சர்வதேச விசாரணை கோரி, புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஓர் அங்கமாக, பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், லண்டனில் இருந்து ஜெனிவா வரை சைக்கிளில் பயணிக்கும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 2ஆம் திகதி பிரிட்டன் பிரதமர் இல்லத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சைக்கிள் போராட்டம், ஐரோப்பிய நாடுகள் ஊடாக, எதிர்வரும் 20ஆம் திகதி ஜெனிவாவைச் சென்றடையவுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஒரு வ்டிவமாக நெதர்லாந்து தமிழ் பேரவையின் ஏற்பாட்டில், நெதர்லாந்தின் டென்ஹாக் நகரில் அமைந்துள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள், சர்வதேச விசாரணை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி கோஷமிட்டனர்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத் தொடர்களில் இலங்கை விவகாரத்தில் சாதகமான தீர்வு எட்டப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-22)



## வீட்டுத்தோட்ட செய்கைக்கு 15,000 பயனாளிகள் தெரிவு

மன்னார், செப். 11

மன்னார் மாவட்டத்தில், 153 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வீட்டுத்தோட்டச் செய்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று மன்னார் சமுர்த்திப் பணிப்பாளர் ஐ.அலியார் தெரிவித்துள்ளார்.

வறுமை ஒழிப்புத் திட்டத்தில் நாட்டிலுள்ள சகல பிரதேசங்களிலும் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் 'சமுர்த்தி சௌபாக்கியா' வீட்டுத்தோட்டத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி 153 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருண்மியம் நலிந்த குடும்பங்கள், வீட்டுத் தோட்டச் செய்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக இந்தத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-60)

## புதுக்குடியிருப்புச் செயலகத்தில் கோவிட் தொடர்பாடல் நிலையம்

கொழும்பு, செப். 11

புதுக்குடியிருப்புப் பிரதேச இளைஞர், யுவதிகளை இணைத்து கொரோனா தொடர்பாடல் நிலையமொன்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவும் வகையில், செயலாளர் எஸ்.ஜெயக்காந் இந்த நிலையத்தை ஆரம்பித்துள்ளார்.

இதனூடாக மருத்துவ உதவிகள் மற்றும் பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கமைவாக அவசர தொடர்பு இலக்கத்துக்கு (0771116604, 0762341114) தொடர்பை ஏற்படுத்தி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொற்று அறிகுறிகள் தென்படுபவர்கள், வீட்டை விட்டு வெளியே வருவதைத் தவிர்த்து, தேவையான உதவிகளை வீட்டில் இருந்தபடியே பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-19)

## 10,200 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார அபிவிருத்தித் திட்டம்

முல்லைத்தீவு, செப்.11

சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, வீட்டுத்தோட்டப் பெரும்போக பயிர்ச்செய்கை அபிவிருத்தித் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தலா 75 பயனாளிகள் வீதம் 10 ஆயிரத்து 200 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்ப கட்டமாக உண்ணாப்புலவு கிராம அலுவலர் பிரிவில், பயனாளிகளுக்கு விதைப் பைக்கற்றுக்கள் மற்றும் தென்னங்கன்றுகளை வழங்கி, மாவட்டச் செயலர் க.விமலநாதன் திட்டத்தை ஆரம்பித்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ் விதைப் பைக்கற்றுக்கள், ஏற்றுமதிப்பயிர்கள், தென்னங்கன்றுகள், பழமரக்கன்றுகள், கோழிக்குஞ்சுகள் என்பன வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஜெயபவானி கணசமூர்த்தி, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக சமுர்த்தித்திட்ட முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மட்டுப்படுத்தப்பட்ட பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-4-19)

## கரியாலைநாகபடுவான் குள சீரமைப்பு ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி, கரியாலைநாகபடுவான் குளத்தின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 7 மில்லியன் ரூபா நிதிச் செலவில் இந்தச் சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் குளம் சீரமைக்கப்படவில்லை.

குளத்தின் அணைக்கட்டு உட்பட பல பகுதிகள் சேதமடைந்திருக்கும் நிலையில், அவற்றைச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (எ-13)

# கற்றல் செயற்பாடுகள் முடங்க அரசாங்கமே முழுக் காரணம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு



**கொழும்பு, செப். 11**

**அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளால் மாணவர்களின் கல்விக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளுக்கு அரசு தீர்வு வழங்குவதைத் தாமதித்து வருகின்றது. இதனால் மாணவர்களுக்கே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும். ஆனால் அரசு அதைச் செய்யாது பிரச்சினையை நீடித்து வருகிறது. இதனாலேயே மாணவர்களுக்கு இணையவழி கற்றல் தடைப்பட்டுள்ளது என்பதை நாம் பெற்றோருக்கு கூற விரும்புகிறோம்.

அமைச்சரவை பத்திரமொன்றை வெளியிடுவதால் மாத்திரம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்பதை நாம் எவ்வாறு நம்புவது? அடுத்த கட்டமாக சுற்றறிக்கை, வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட வேண்டும்.

இது தொடர்பில் நாம் கலந்துரையாட வேண்டுமென அமைச்சரவை உபகுழுவுக்கும், கல்வி அமைச்சுக்கும் அறிவித்து ஒரு வாரம் ஆகின்றது.

ஆனால் இதுவரையில் பதில் கிடைக்கவில்லை.

இதனாலேயே பிரச்சினை நீடித்து வருகிறது. எங்களது கோரிக்கைகளை குறைத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை தொடர்பில் நாம் அரசுக்கு அறிவித்துள்ளோம்- என்றார். (எ-இ)



# பாடசாலைகளை ஆரம்பியுங்கள்!

## சம்பிக்க அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, செப். 11

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைய அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் பெரும் வரி ஏய்ப்புக்களை செய்பவர்களுக்கு தற்போதைய அரசு வரிச்சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த ஊழல்வாதிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் வாய்ப்பை இல்லாதொழிக்கும் வகையில் புதிய சட்டவரைபு ஒன்றையும் அரசு கொண்டுவந்துள்ளது.

இந்தச் சட்டவரைபின் ஊடாக கறுப்புப் பணம் வெள்ளையாக்கப்படும். கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான தொழில்நுட்ப குழுவிலிருந்து விசேட நிபுணர்கள் தொடர்ந்து விலகி வருகிறார்கள். இவ்வாறு நிபுணர்கள் விலகிச் சென்றால், அந்தக் குழு அமைக்கப்பட்டமைக்கான நோக்கம் நிறைவேறாது.

பிள்ளைகளுக்கு தற்போது கல்விச் செயற்பாடுகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளைத் திறப்பதற்கான எந்தவொரு வேலைத் திட்டமும் அரசிடம் இல்லை. தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ளதால், நாட்டில் உள்ள பிள்ளைகள் தொடர்பில் அவர்களுக்கு அக்கறை இல்லை- என்றார். (எ-இ)

# பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு

கொழும்பு, செப்.11

கொழும்பு மோதரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இளம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுத் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இராகலை சென்லெனாட்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த பூராஜா சுதாகர் என்ற 24 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் பொலிஸ் சேவையில் இணைந்து ஒரு வருடமே ஆகின்றது என்றும், தனக்கு கொரோனா உள்ளது எனக் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு மோதரை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கும் அறையில் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ஒலிம்பிக் சாதனையாளர் ஹேரத்துக்கு புதிய வீடு

கொழும்பு, செப். 11

ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனை படைத்து, இலங்கைக்குத் தங்கப்பதக்கம் வென்றுகொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு புதிய வீடு ஒன்றைப் பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறி நிமல் பெரேராவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்திலிருந்து குறித்த வீட்டைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். அதற்கமைய அவருக்கான வீட்டைப் பெற்றுக் கொடுக்குமாறு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் உதய நாணாயக்காரவுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-4)



# மஹிந்தவின் செயலாளராக உதித லொக்குபண்டார நியமனம்

கொழும்பு, செப். 11

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதித லொக்குபண்டார, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நாடாளுமன்ற விவகார செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னாள் சபாநாயகர் மறைந்த வி.ஜே.மு லொக்குபண்டாரவின் மகனாவார். பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2009ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவான உதித் லொக்குபண்டார 2015ஆம் ஆண்டுவரை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அமைச்சுக்களின் ஆலோசனைக் குழுக்கள் பலவற்றில் பிரதிநிதியாக செயற்பட்ட உதித் லொக்குபண்டார, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினராகவும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார். (எ-இ)

# பொருளாதாரத்தை மீட்க ஐ.தே.கவாலேயே முடியும்

## ருவான் விஜேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, செப். 11

வீழ்ந்து வரும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு நாட்டில் மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும் என்பதே ஒரே தீர்வு என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரமே கொரோனா வைரஸை ஒழிப்பதற்கான வேலைத் திட்டங்கள் காணப்படுகின்றன. நாட்டுக்கு ரணில் போன்ற அறிவார்ந்த தலைவர்கள் வேண்டும் என்றே நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றனர். நாட்டில் தற்போது அதிகாரத்தில் உள்ளவர்களை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு 69 இலட்சம் மக்கள் தங்களது வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். இன்று 69 லட்சம் மக்களின் எதிர்பார்ப்புக்களும் சூனியமாகியுள்ளன.

இப்போது நாடு நாசமாக்கப்பட்டு நாட்டு மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். எதிர்காலம் தொடர்பான நம்பிக்கை இல்லாதுபோயுள்ளது. இப்போது நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை தேடி வருகிறார்கள்.

நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே மீண்டும் கட்டியெழுப்ப முடியும்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பணத்தைக் கையாளவே நிவாட் கப்ராலுக்கு ஆளுநர் பதவி

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, செப். 11**

**கறுப்புப் பணத்தை சட்டபூர்வமாக்குவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே, மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்படவுள்ளார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவிக்கையில்,

கறுப்புப் பணத்தை சட்டபூர்வமாக்குவதற்கு நாடாளுமன்றத்தில் சட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்பட்ட பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் மத்திய வங்கி ஊடாகவே இடம்பெறும். நாடாளுமன்றில் தற்போது சட்ட ஏற்பாடு நிறை வேற்றப்பட்டுள்ளது. அடுத்தது மத்திய வங்கி, அங்கு தனக்குத் தேவையான விடயங்களைச் செய்வதற்காகவே அஜித் நிவாட் கப்ராலை மத்திய வங்கி ஆளுநராக நியமிப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் மக்கள் மத்தியிலும் சந்தேகம் உள்ளது.

தற்போது மத்திய வங்கி ஆளுநராக உள்ள பேராசிரியர் லக்ஸ்மனை விடவும் எந்த விதத்தில் அஜித் நிவாட் கப்ரால் உயர்ந்தவர்? எனவே, நியமனத்தின் நோக்கம் தெளிவாகின்றது. கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் நடவடிக்கையின் இரண்டாவது பகுதியை முன்னெடுக்கவே இந்த நியமனமாகும்.

மக்கள் மனம் அறிந்த தலைவரான பஸில் ராஜபக்ச வந்தால் மாற்றம் நடக்கும் என்று பிரசாரம் செய்தனர். பஸிலும் நிதி அமைச்சரானார். நடந்துள்ள மாற்றம் என்ன? இருந்தவையும் இல்லாமல் போயுள்ளன. உள்ளாடைகளும் இல்லாமல் போகப்போகின்றன. எனவே, பொருளாதாரக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், மாற்றத்தை எதிர் பார்க்க முடியாது - என்றார். (ம-4,44)

# கப்ராலுக்கு பதிலாக வருபவர் கொள்ளைகளின் பங்குதாரர்!

## எதிர்க்கட்சி சாடுகின்றது



கொழும்பு, செப்.11

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்குப் பதிலாக, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட இருப்பவர் கொள்ளையின் பங்குதாரர். புதிதாக வருபவருக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அந்தப் புதியவருக்கு இடமளித்தால், இந்த நாடு மோசமான நிலைக்குத்தான் செல்லும். இவர்களின் கொள்ளை நடவடிக்கைகளுக்கு புதிதாக ஒரு பங்குதாரரை அழைத்து வரும் நடவடிக்கையே முன்னெடுக்கப்படுகின்றது. இன்று நாட்டில் வாகன விலை ஆகாயத்தை தொட்டுள்ளதால், சாதாரண மக்களுக்கு கனவில் கூட வாகனங்களை வாங்கமுடியாது.

அதே போல் வாகன இறக்குமதியாளர்கள், வாகனங்களை விற்கமுடியாமல், தமது வர்த்தக நிலையங்களை இழுத்து மூடியுள்ளனர். ஆனால் அரசுடமையாக்கப்பட்டுள்ள பெரும் வாகனங்களை தனக்கு வேண்டப்பட்ட இரண்டு அல்லது 3 வர்த்தகர்களுக்கு மட்டும் விடுவிக்க நிதியமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சகல வாகன இறக்குமதியாளர்களையும் இந்த அரசு சமமாகப் பார்க்க வேண்டும். வாகன விலையை கட்டுப்படுத்த அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-இ)

# 2 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு



கொழும்பு, செப். 11

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி, வனவாசலப் பகுதியில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் என்று கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த, கிரான்பாஸ் பகுதியைச் சேர்ந்த இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு கிலோ 666 கிராம் ஐஸ் ரக போதைப்பொருளும் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

# முன்னாள் சட்டமா அதிபரிடம் சி.ஐ.டி. விசாரணை நடத்தும்!

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 11

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தை மையப்படுத்தி முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா வெளியிட்டிருந்த கருத்துத் தொடர்பில், சி.ஐ.டியினர் அவரிடம் விசாரணை நடத்தக்கூடும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் பெரும் சூழ்ச்சி உள்ளது என்று முன்னாள் சட்டமா அதிபர் கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் அவரிடம் சி.ஐ.டியினர் விசாரணை மேற்கொள்வார்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டமா அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவரும் சாதாரண பிரஜையே. நீங்கள் கூறிய விடயம் குறித்து நாமும் அவதானம் செலுத்தியுள்ளோம். யாராவது ஏதேனும் கருத்து வெளியிட்டால், அது சி.ஐ.டியின் விசாரணையுடன் சம்பந்தப்பட்ட விடயமெனில் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும். எனவே, எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, தாக்குதல் சம்பவம் தொடர்பில் பேராயர் பல கருத்துகளை வெளியிட்டுள்ளார். இதனையொட்டி கவலையடைகின்றேன். அது அவரின் கருத்து. தமது கருத்தை வெளியிடுவதற்குரிய சுதந்திரம் அவருக்கு இருக்கின்றது. எனினும், எவரேனும் கருத்து வெளியிடுவதாயின், அது தொடர்பில் தகவல்களைத் தேடிப்பார்த்து, அறிவிப்பு விடுப்பதே சிறப்பானதாக இருக்கும்.

ஏதேனும் ஒரு தகவல் பிழையாக இருந்தால்கூட வழக்கு விசாரணை தலைகீழாக மாறக்கூடும். எனவேதான் அனைத்துக் காரணிகளையும் திரட்டிய பின்னர் நீதிமன்றில் முன்வைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர் - என்றார். (கு-44)

# குடையால் வந்தது சண்டை நால்வர் மருத்துவமனையில்

கொழும்பு, செப். 11

குடை மோதியதால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, நால்வர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் கண்டியில் இடம்பெற்றுள்ளது.

கண்டி மருத்துவமனையின் பாதுகாப்பு அதிகாரி கொண்டு சென்ற குடை, உடலில் மோதியதால் கோபமடைந்த அம்புலன்ஸ் சாரதி அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்டார். இதனை அடுத்து அங்கு ஏற்பட்ட மோதலில் காயமடைந்த நால்வர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் மூவர் மற்றும் அம்புலன்ஸ் சாரதி ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

# விசேட அதிகாரங்களுடன் பதவியேற்கின்றார் கப்ரால்

கொழும்பு, செப். 11

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், எதிர்வரும் 16 ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநராகப் பதவியேற்பார் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்காக தற்போது மத்திய வங்கி ஆளுநர் பதவியை வகிக்கும் பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஷ்மன் விரைவில் பதவி துறக்கவுள்ளார்.

அத்துடன், அஜித் நிவாட் கப்ராலும், நிதி இராஜாங்க அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறக்கவுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநராகப் பதவியேற்கவுள்ள அஜித் நிவாட் கப்ராலுக்காக விசேட அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கப்ராலால் முன்வைக்கப்பட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றும் விதத்திலேயே குறித்த அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சில விசேட அதிகாரங்களும் மத்திய வங்கி ஆளுநருக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரியவருகின்றது. (ம-4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் படுதோல்வி

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மையங்கள் மீது அல் கெய்தா அமைப்பு தாக்குதல் நடத்தி இன்றுடன் 20 வருடங்கள் ஓடி மறைகின்றன. இன்று உலகின் பல்வேறு நாடுகளில் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் மாற்றங்களுக்கும் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களின் அழிவுக்கும் இன்றைய நாளில் அன்றைய ஆண்டில் இடம்பெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதல் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது என்றால் அதை எவராலும் மறுக்க முடியுமா?


2001ஆம் ஆண்டு இதேபோன்றதொரு நாளில் அல் கெய்தா அமைப்பால் சில விமானங்கள் கடத்தப்பட்டு, நியூயோர்க் நகர வர்த்தகக் கட்டடங்கள் மீதும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். பல பில்லியன் டொலர் பொருளாதார இழப்பை அமெரிக்கா சந்தித்தது. இந்தத் தாக்குதலின் பின்னர் அமெரிக்கா பிற்போக்குத்தனமான சில நடவடிக்கைகளை எடுத்தது.

'பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர்' என்ற பிரகடனம் அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டது. நேட்டோ நாடுகளினதும், படைகளினதும் பங்களிப்புடன் அது ஒரு பொதுக்கொள்கையாக மாற்றப்பட்டு உலகின் பல்வேறு நாடுகளுக்குள்ளும் நிலவிய ஆயுத, உரிமை மீட்புப் போர்களில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டது.

அல் கெய்தா அமைப்புக்கு தலிபான்கள் அடைக்கலம் கொடுக்கின்றனர் என்று தலிபான்களின் ஆட்சியை ஆயுத முனையில் அகற்றினார் அப்போதைய அதிபர் புஷ். ஜனநாயக ரீதியான அரசொன்று அமெரிக்காவின் ஆதரவுடன் ஆப்கானிஸ்தானில் அமைக்கப்பட்டாலும் அந்த அரசை கட்டிக்காக்க அமெரிக்காவால் முடியவில்லை. ஆப்கானிஸ்தானில் இருந்து இப்போது அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்பட, சில தினங்களில் தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஆட்சியமைத்துள்ளனர். இந்த வருடம் தலிபான்களின் பேரெழுச்சியும் அவர்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்ததும் அமெரிக்காவின் தோல்வியே அன்றி அது ஆப்கானிஸ்தான் அரசினதோ அல்லது அஸ்ரப் கனியினதோ தோல்வியாக அமையாது.

அல் கெய்தா அமைப்பையும் அமெரிக்காவால் அழித்துவிட முடியவில்லை. ஒசாமா பின்லேடனின் தலைமையின் கீழ் அல் கெய்தா முன்னெடுத்த செயற்பாடுகளை இன்று ஒசாமாவின் மகனான ஹம்சா பின்லேடன் செய்துகொண்டிருக்கின்றார். ஆக, எந்த இரு அமைப்புக்களுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுத்ததோ அந்த அமைப்புக்களை அமெரிக்காவாலோ அல்லது அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகளாலோ அழித்துவிட முடியவில்லை. அதைவிட போஹோகரம், ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற பயங்கரவாதக் குழுக்களும் இந்த 20 ஆண்டுகளில் முளைவிட்டுள்ளன. எனில், அமெரிக்கா அறிவித்த 'பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர்' என்பதன் நோக்கம்தான் என்ன?.

அமெரிக்கா செய்ததெல்லாம் ஒன்றுதான். அது உரிமை மீட்புக்காகப் போரிட்ட ஆயுதக் குழுக்களையும் பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் கொண்டு வந்தது. காசாவில் பலஸ்தீனர்களுக்காகச் செயற்பட்ட ஹமாஸ், இலங்கையில் விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்களின் அழிவைத்தான் இந்த 'பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர்' சாதித்ததே தவிர அதுவொன்றும் தான் கொண்ட கொள்கையை நிறைவேற்றவில்லை என்பதே யதார்த்தம்.



# சட்டவிரோத மணல் அகழ்வு முல்லைத்தீவில் அமோகம்!

## அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, செப். 11**

**முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவிலும், பனையடிக் கிராமத்திலும் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தற்போதுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி சிலர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**



அதிகாலை வேளையில் கடற்கரைக்கு அண்மையில் உள்ள பிரதேசங்களில் உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றப்பட்டு டிப்பர் வாகனங்கள் மூலம் கடத்தப்படுகின்றது என்றும், இராணுவச் சோதனைகள் இல்லாத வீதிகள் வழியாக மணலைக் கொண்டு செல்கின்றனர் என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு தினமும் 10 க்கு மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மணல் கடத்தப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள கிராமமக்கள், சட்டவிரோத மணல் அகழ்வால் அந்தப் பகுதி பெரும் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்றும், கடல் நீர் கிராமத்துக்குள் புகும் அச்சுறுத்தல் உள்ளது என்றும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்து சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்தவேண்டும் - என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-19)

# அனுமதி மறுக்கப்பட்டும் பெருமளவு பனைகள் அழிப்பு

## நீதிமன்றில் வழக்கு

காரைநகர், செப். 11

காரைநகரில் ஒரு விளையாட்டுக் கழகத்தின் மைதானத்துக்காக பெருந்தொகைப் பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், இரண்டு வீடுகளில் இருந்து 30க்கும் மேற்பட்ட மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் காரைநகர் பிரதேச செயலர் தெரிவிக்கையில், காரைநகரில் ஒரு விளையாட்டுக் கழக மைதானத்தின் கொள்வனவுக்காக மைதானத்தில் காணப்படுகின்ற பனை மரங்களைத் தறிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது. தறிக்கின்ற மரங்களை வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்குவோம் என்றும் அவர்கள் கூறியிருந்தனர்.

இருப்பினும் தற்போதைய நிலையில் வீட்டுத் திட்டங்கள் எதுவும் இடம்பெறாத காரணத்தால் மரங்களைத் தறிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை. வீட்டுத் திட்டம் வழங்கப்படுகின்ற தருணத்தில் பனை மரங்களைத் தறித்து வழங்கலாம் எனவும் ஆலோசனையை முன்வைத்தேன்.

இதனைக் கருத்திற் கொள்ளாது அங்கு பெருந்தொகையான மரங்களைத் தறித்துள்ளனர். இதனை அடுத்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தோம். சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது - என்றார்.

(ம-4,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க விடயங்களுக்காக இலங்கையோடு இணைவோம்!

## அமெரிக்கா தெரிவிப்பு

கொழும்பு, செப். 11

நல்லிணக்க விடயங்களில் இலங்கையுடன் இணைந்துள்ளோம் என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி.டெப்லிட்ஸ் மனித உரிமைகளை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது என அமெரிக்கா கருதுகிறது என்றும் தெரிவித்துதார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்தகால மற்றும் நிகழ்கால மனித உரிமை விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கடந்த மற்றும் நிகழ்கால அநீதிகள்பற்றி கவனிக்க வேண்டும். எங்கள் பார்வையில் அனைத்து மக்களுக்கும் பொறுப்பான ஒரு ஜனநாயக அரசு உண்மையுடனும், நம்பகத்தன்மையுடனும் குற்றச் செயல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கவேண்டும்.

இந்த விடயத்தில் நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் முழுமையாக இணைந்திருக்கிறோம். நல்லிணக்கம், நீதி மற்றும் முழு இலங்கையருக்குமான நீடித்த அமைதி ஆகியவற்றில் முன்செல்வோம் என்று நம்புகிறோம். சிரமமான பேச்சு மற்றும் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்த உதவுவதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் - என்றார். (எ-இ)

# குடமுருட்டிக் குளம் மீளப் புனரமைப்பு

கிளிநொச்சி, செப். 11



பூநகரி குடமுருட்டிக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்துள்ளார்.

குடமுருட்டிக்குள அணைக்கட்டின் சில இடங்களில் நீர்க்கசிவுகள் ஏற்படுவது உண்டு. கடந்த காலங்களில் விவசாயிகளின் உதவியுடன் கசிவுகள் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 7 மில்லியன் ரூபா நிதிச் செலவில் அணைக்கட்டின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மழை காலத்தில் கூடுதலான நீரைச் சேமிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-4.13)

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 12 . 1940



இறப்பு 08 . 09 . 2021

## இரத்தினதுரை பகவதியம்மா

பணிப்புலம் பண்டத்தரிப்பை சேர்ந்த இரத்தினதுரை பகவதியம்மா 08.09.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற சோமசுந்தரம் (Shroff) செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும். காலம் சென்ற செல்லத்துரை சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும். காலம்சென்ற இரத்தினதுரை (ஓய்வுபெற்ற தபாலதிபர்- சுழிபுரம் தபால் நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும். Dr பஞ்சாட்சரம் (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும் Dr ஞானேஸ்வரி (லண்டன்). இராசலட்சுமி. உருத்திரசிங்கம்(கனடா). அமரர் பூபாலசிங்கம். அமரர் மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும். கலாமதி. சுமதி (கனடா). கோமதி (கனடா). Capt.ரகுபதி (பழைய மாணவன் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி. Master Mariner- அவுஸ்திரேலியா). அகிலன் (பழைய மாணவன் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி. B.Eng-கனடா). இந்துமதி (B.A, B.E.D ஆசிரியை-பண்ணாகம் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு தாயாரும். மனோகரன் (ஓய்வுநிலை உத்தி யோகத்தர். சிமெந்து கூட்டுத்தாபனம்- காங்கேசன்துறை). இளங்கீரன் (கனடா). தருமலிங்கம் (கனடா). யாழினி (அவுஸ்திரேலியா). சிவஜா (Optician). யாதவன் (B.A, M.A, Excise Inspector-Point Pedro) ஆகியோரின் அன்பு மாமியாரும். பரிசித் (HVAC Technician). தர்சிகா (B.A, M.A). குமரன் (B.A). துவீபன் (B.A). நஸானின் (Acc.Dip.). நிறோசிகா (Juris Doctor). திவோஷன் (B.Com). ஆரபி (B.Sc.). அபிரா (Faculity of Medicine- Australia). றொனால்ட் ஒகஸ்ட்ஸ் (Uni-அவுஸ்திரேலியா). தீரன். யானன். நிலன். மாதங்கி. சேயவன். சௌமியன் ஆகியோரின் பேத்தியும். சகானா. கார்த்திக் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.09.2021) சனிக்கிழமை யாழ் கோம்பயன் இந்து மயானத்தில் நடைபெற்று. அஸ்தி 12.9.2021 ஞாயிற்றுக்கிழமை சம்பில்துறை ஜம்புகோள பட்டின ஜம்புநாதேஸ்வரர் புனித தீர்த்தத்தில் கரைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 0776151783**

**தகவல்: குடும்பத்தினர். பணிப்புலம்.**

# மலையகத் தொழிலாளர்களை அடிமைகளாக்க அரசு முயற்சி!

## மனோ கண்டனம்



**கொழும்பு, செப். 11**

**பால் உற்பத்தியை அதிகரிக்கிறோம் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் மலைத்தோட்டக் காணிகளை உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு, கொடுக்க அரசு முயற்சிக்கின்றது. இதனூடாக மலையகத் தொழிலாளர்களை அடிமைகளாக்க அரசு முயற்சிக்கின்றது இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நாவலப்பிட்டிய கலபொடவத்த தோட்டம், கண்டி அந்தானைப் பகுதியைச் சேர்ந்த தெல்தொட்ட தோட்டம், க்றேவ் வெலி தோட்டம் மற்றும் வட்டவளை மவுன்ட் ஜின் தோட்டம் ஆகியவற்றில் சுமார் ஆயிரத்து 100 ஏக்கர் காணிகளை, உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கி வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தோட்டங்களை உருவாக்கி நூறாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக அங்கு வாழும் தொழிலாளர்களை உள்வாங்கி, அவர்களுக்குக் காணிகள் வழங்கி, பசுமாடு வளர்ப்புக்கு உதவி செய்து, வீட்டுப் பண்ணை அடிப்படையில், பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு மறுக்கின்றது.

அத்துடன் தோட்டக் காணிகள் தொழிலாளருக்கு மறுக்கப்பட்டு வெளியாருக்கு மாத்திரம் கொடுக்கப்படும் முயற்சிகள் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலும் ஆரம்பமாகியுள்ளன. ஒட்டுமொத்தமாக மலையகத் தொழிலாளர்களை இன்னமும் நூறு வருடங்களுக்கு கூலித்தொழிலாளர்களாகவே வைக்கும் முயற்சியை இந்த அரசு முன்னெடுக்கின்றது. இதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் வாய்மூடி மௌனியாக துணை போகின்றது. இதற்கு நாம் இடம் கொடுக்க முடியாது.

பால் பொருள்கள் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். உள்நாட்டு பால் உற்பத்தி பெருக வேண்டும். இந்த நாட்டில் பாலாறு, தேனாறு ஓடவேண்டும். இவற்றுக்கு நாம் இரண்டு கைகளையும் தூக்கி ஆதரவு வழங்குவோம். ஆனால், இருக்கும் பால்பண்ணைகளை அபிவிருத்தி செய்யாமல், புதிய பண்ணைகளை அமைக்கிறோம் என்ற போர்வையில், மலையகக் காணிகளை அபகரித்து, நமது மக்களை நடுத்தெருவில் நிறுத்த இடம்கொடுக்க முடியாது.

காணிகளைப் பிரித்து, எமது மக்களுக்கும் வழங்குங்கள். கிராமத்து மக்களுக்கும் வழங்குங்கள். இதன் மூலம் அவர்களது வருமானமும் அதிகரிக்கும். பால் உற்பத்தியும் அதிகரிக்கும். நாடும் செழிக்கும்.

நீங்கள் அடையாளம் கண்டுள்ள அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான மலைக்காணிகள், பால் பண்ணை நடத்த அல்ல, வேறு நடவடிக்கைகளுக்குப் பயன்படப் போகின்றது என எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதன் உள்நோக்கம் மலைநாட்டுத் தொழிலாளருக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்று எமக்குத் தெரிய வந்துள்ளது. இந்தப் பகுதிகளில் ஏற்கனவே மாணிக்கக் கல் தோண்டும் நடவடிக்கைகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. அவற்றை முழுமையாக்கவா இந்த நடவடிக்கை என நாம் கேட்கிறோம் - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களைப் பதுக்கினால் கைப்பற்றப்பட்டு விற்பனை

## அமைச்சர் பந்துல எச்சரிக்கை



கொழும்பு, செப். 11
சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அவை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யப்படும். வியாபாரிகள், பிரதானநிலை உற்பத்தியாளர்கள் அத்தியாவசியப் பொருள்களை பதுக்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

காணொலி ஒன்றின் ஊடாக நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரிசி விலையை நிர்ணயத்தன்மையில் பேணுவதற்கு அரசு முன்னெடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. பெரும்போக விளைச்சலை தொடர்ந்து நாடு அரிசி ஒரு கிலோகிராம் 98 ரூபாவுக்கும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 103 ரூபாவுக்கும் வழங்க பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் வாக்குறுதியளித்தார்கள்.

இருப்பினும் கடந்த இரு வாரகாலமாக அரிசி உற்பத்தியாளர்கள் சந்தைக்கு முறையாக அரிசியை விநியோகிக்கவில்லை. சதொச நிறுவனத்தின் விலை மனுகோரலுக்கு சமுகமளிக்கவும் இல்லை. வழமையாக ஒரு நாளைக்கு 5 தொடக்கம் 6 இலட்சம் கிலோகிராம் வரையிலான அரிசியை சந்தைக்கு வழங்கும் பிரதான நிலை உற்பத்தியாளர்கள், கடந்த இருவாரங்களில் ஒரு நாளைக்கு 30 ஆயிரம் கிலோ கிராம் அரிசியை மாத்திரம் சந்தைக்கு வழங்கினார்கள்.

அரிசி விநியோகத்தை குறைத்து சட்டவிரோதமான முறையில் அரிசியைப் பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு பிரதானநிலை அரிசி உற்பத்தியார்கள் வகுத்த சூழ்ச்சி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் முறியடிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அவை சதொச விற்பனை நிலையத்தின் ஊடாக நிர்ணய விலைக்கு விற்பனை செய்யப்படும். வியாபாரிகள், அத்தியாவசியப் பொருள் உற்பத்தியாளர்கள் அத்தியாவசிய பொருட்களைப் பதுக்குவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். -என்றார். (எ-இ)

### தற்போதுள்ள தொற்றாளர்களில்

# 95.8 வீதமானோருக்கு டெல்டா தொற்றுறுதி!

**கொழும்பு, செப். 11**

**இலங்கையில் தற்போதுள்ள தொற்றாளர்களில் 95.8 வீதமானவர்களுக்கு, டெல்டா வைரஸ் தொற்று உள்ளது என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**



சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மரபணு உயிரியல் பிரிவின் ஆய்வாளர்களான பேராசிரியர் நீலிகா மாலவிகே, மருத்துவர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட குழுவினர், கிடைக்கப் பெற்றுள்ள மாதிரிகளின் அடிப்படையில் ஆய்வை மேற்கொண்டனர்.

அதனூடாக இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சில மாகாணங்களில் பதிவாகும் தொற்றாளர்களில் 84 முதல் 100 வீதம் வரை டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அம்பாந்தோட்டைக்கு வழங்கப்பட்ட பைஸர்

## சுகாதார அமைச்சு விளக்கம்

அரசால் முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு பைஸர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தடுப்பூசிகளின் விநியோக செயல்முறை உலக சுகாதார ஸ்தாபனத்தால் தீர்மானிக்கப்பட்டது என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வகை தடுப்பூசியையும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு விநியோகிப்பது தொடர்பான முடிவானது உலக சுகாதார ஸ்தாபனத்தால் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி தலைமையிலான கொரோனா பணிக்குழுவினாலேயே முன்னெடுக்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பைஸர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அடுத்த மாதம் 4 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் நாட்டை வந்தடையவுள்ளன - என்றார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு பைஸர் தடுப்பூசி எவ்வாறு வழங்கப்படுகின்றது? இதில் சதி மற்றும் இரகசியம் உள்ளது என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குற்றம் சுமத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# புதிதாக பரவலடையும் திரிபு வைரஸ்கள்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, செப். 11
நாட்டில் புதிதாக மேலும் பல திரிபு வைரஸ்கள் அடுத்தடுத்து உருவாகி வருகின்றன என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு கொரோனா வைரஸ் திரிபு கட்டுப்படுத்தப்பட்டு வரும் நிலையில், மேலும் வைரஸ்கள் பரவ இடமளிக்காதீர்கள்.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக அனைவரும் ஒன்றிணைவது முக்கியம்.

மருத்துவ நிபுணர்கள் கொரோனா வைரஸ் ஒழிப்பு தொழில்நுட்பக் குழுவிலிருந்து விலகிய போதும், அவர்கள் சுகாதாரத்துறைக்கு முழுமையான பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 11
கொரோனாத் தொற்று நிலைமை இருந்தாலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், திட்டமிட்ட குற்றச்செயல்கள், பாதாள உலகச் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்கவும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சிறைச்சாலைகளில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதைக் கண்டறிந்து சிறைச்சாலையின் பாதுகாப்பு முறைமைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதன் பயனாக, தற்போது குற்றச்செயல்கள் முற்றாகக் குறைந்துள்ளன.

அதற்கமைவாக சிறைச்சாலைகளுக்கான விசேட பாதுகாப்பு முறைமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருட காலப்பகுதிக்குள் 3 ஆயிரத்து 200 கிலோ ஹெரோயின், 20 ஆயிரத்து 949 கிலோ கேரள கஞ்சா உட்பட பல்வேறு வகையான போதைப்பொருள்கள் தரை மற்றும் கடல் வழியாக கடத்தப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் பாதாளஉலக கோஷ்டியினர் பயன்படுத்திய 48 பிஸ்டல்கள், ரி-56 ரக துப்பாக்கிகள் உட்பட பல்வேறு வகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. -என்றார். (ம-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகளுக்கான சிகிச்சைமுறைகள்





**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம்,யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர்,
யாழ் . போதனா வைத்தியசாலை.






## பெண்கள்:

பெண்களில் கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணங்களை உரிய மருத்துவக் கணிப்பீடு மற்றும் பரிசோதனைகளுடாகக் கண்டறியப்படும் பொழுது,அதற்குரிய சிகிச்சையினை சரியான நேரத்தில் ஆரம்பிக்க முடியும். இதனால் குழந்தையின்மைக்கான சிகிச்சைகளில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்து சிகிச்சையில் நல்ல விளைவுகளையும் வெற்றிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். பொதுவாக இந்தச் சிகிச்சைமுறைகளை சூல் கொள்ளலில் ஏற்படும் பிரச்சினைகள் ,பலோப்பியன் குழாய் மற்றும் கருப்பை தொடர்பான காரணிகள் என வகைப்படுத்திப் பார்க்கலாம். மூளையில் உள்ள பரிவகக் கீழ் கபச்சுரப்பிகளில் இருந்து பல வகையான ஹோமோன்கள் சுரக்கப்பட்டு அவை உடலில் உள்ள மற்றைய ஹோமோன்களைக் கட்டுப்படுத்துகின்றது. இந்த ஹோமோன்கள் உற்பத்தியிலும் சமநிலையிலும் குழப்பம் ஏற்படும் போது அதற்காக ஹோமோன்களை ஊசி மூலம் ஏற்றுதல் மூலம் முட்டைவிருத்தியையும் சூல் கொள்ளலையும் தூண்டலாம். அத்துடன் மூளையில் உள்ள சிலகட்டிக ளும் இந்த ஹோமோன்களின் சமநிலையைக் குழப்புமிடத்து அதனை சத்திரசிகிச்சை மூலம் அகற்றிச் சூல்கொள்ளலை அடைய முடியும். இதற்குத் தகுந்த மருத்துவ ஆலோசனையும் மருத்துவ மதிப்பீடும் அவசியம்.

சூல் கொள்ளலில் ஏற்படும் பிரச்சினைகளில் முக்கியமானதும் பொதுவானதுமான காரணம் பொலிசிஸ்டிக் ஓவரியன் சின்ரோம் (Polycysitc Ovarian Syndrome) ஆகும். பொலிசிஸ்டிக் ஓவரியன் சின்ரோம் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் அதிகரித்துவரும் ஒரு பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினையுடைய பெண்களில் உடற்பருமன் அதிகரித்தல் ,முகப்பரு மற்றும் மயிர் முளைத்தல் என்பனகாணப்படும். ஸ்கான் பரிசோதனைகளில் சூலகங்கள் வழமையை விட சற்றுப் பெரிதாகவும் ,சிறிய பல நீர்க்கட்டிகளையும் கொண்டிருக்கும். இது நீண்டகால உடல்நலப் பாதிப்புக்களையும் உருவாக்கலாம். (உ+ம்: சலரோகம்)

இந்த நிலைமையின் போது முட்டை விருத்தியடைதல் சீராக நடைபெறாமையால் சூலகத்தில் இருந்து முட்டைவெளியேறுதல் நடைபெறாது.மற்றும் உருவாகும் முட்டையும் சில சந்தர்ப்பங்களில் தரம் குறைவாகவும் காணப்படும். இதனால் கருத்தரித்தல் தாதமதமடைகின்றது.

இந்தப்பிரச்சினையில் முட்டை விருத்தியடையச் செய்வதற்கு முதற்படியாக உடல் நிறையைக் குறைத்தல் அவசியமாகும். ஆரோக்கியமான உணவுப்பழக்கங்கள் ,உடற்பயிற்சி என்பன உடல்நிறையைக் குறைக்க உதவுகின்றன. சாதாரண உடல்நிறை உள்ளவர்களுக்கு பரிந்துரைக்கப்படும் '30 நிமிடம் வாரத்துக்கு 5 நாள்கள்' எனும் உடற்பயிற்சிமுறையை விட இவர்களுக்கு அண்ணளவாக ஒருமணி நேரத்துக்கு ஒவ்வொருநாளும் உடற்பயிற்சி செய்தல் அவசியமாகின்றது. நடைப்பயிற்சி, ஓடுதல் ,நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளைச் செய்யலாம் . அத்துடன் சில விளையாட்டுக்களும் உடற்பயிற்சியில் உள்ளடங்கும். மிகவும் அதிகமாக உடற்திணிவுச்சுட்டி (35 ஐ விடஅதிகமான) உடைய பெண்கள் மருத்துவ ஆலோசனையுடன் சத்திரசிகிச்சை மூலம் (Bariatirc surgery) உடல் நிறையைக் குறைக்கமுடியும். மேலும் ,மெற்போமின் (Mettormin) எனப்படும் சலரோகத்துக்குப் பயன்படும் மாத்திரையை இந்தப்பிரச்சினை உள்ள பெண்கள் பாவிக்கும் போது முட்டைவிருத்தியை அதிகரிப்பதற்கு உதவும்.

பொலிசிஸ்டிக் ஓவரியன் சின்ரோம் உள்ள பெண்களில் முட்டை விருத்தியையும் ,சூல் கொள்ளலைத் தூண்டுவதற்கும் பலவகையான மருந்துகள் ,ஊசி மருந்துகள் என்பன பயன்படுகிறன. இவர்களில் முட்டை விருத்தியடைதல் குறைவாக உள்ளமையால் ,சரியான நேரத்தில் முட்டை விருத்தியடையும் மருந்து வகைகளைக் கட்டாயமாக ஆரம்பிக்க வேண்டும். பொதுவாகக் குளோமபின் சிற்றேற் ,லெட்ரசோல் போன்ற மாத்திரைகளும் சில ஊசிமருந்துகளும் (eg FSH) இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இம்மாத்திரைகள் பொதுவாக மாதவிடாய் வந்ததிலிருந்து இரண்டாம் நாள் தொடக்கம் 6 ஆம் நாள் வரை பாவிக்கப்பட்டு ஸ்கான் மூலம் முட்டைவிருத்தியடைதல் கண்காணிக்கப்படும். முட்டைவிருத்தியடைதல் போதாமல் உள்ளபோது இதற்கு மேலதிகமாக ஊசிமருந்துகள் (FSH) ஏற்றப்பட்டு சரியான முட்டைவிருத்தியை அடையலாம். இவ்வாறான மருந்துகள் ,ஊசிமுறைகள் மூலமும் முட்டைவிருத்தி குறைவான பெண்களுக்கு லப்பிரஸ்கோப்பி சத்திரசிகிச்சை முறை மூலம் முட்டைவிருத்தியைத் தூண்டலாம். லப்பிரஸ்கோப்பி சத்திரசிகிச்சையானது நோயாளியைப்பூரணமாக மயக்கி , கமராவை வயிற்றினுள் உட்செலுத்தி கருப்பை,சூலகம் ,பலோப்பியன் குழாய் மற்றும் இடுப்புக் குழியை சோதித்துப் பார்க்கமுடியும். இதன்போது தேவையேற்படின் சத்திரசிகிச்சையினையும் செய்யமுடியும். எனவே இவ்வாறான பெண்களில் லப்பரஸ்கோப்பிமுறை மூலம் சூலகத்தில் துளையிடுவதனால்மு (ovarian drillign) முட்டைவிருத்தியை அதிகரிக்கலாம். இவ்வாறான சிகிச்சையின் பின்னரும் முட்டைவிருத்தியடைதல் குறைவாகவோ அல்லது கருத்தரிக்காமல் இருக்குமிடத்து செயற்கைமுறைக் கருக்கட்டல் (ஐஏகு) சிகிச்சையினை ஆரம்பிப்பது சரியானதாகவும் வினைத்திறனானதாகவும் காணப்படுகிறது. பொலிசிஸ்ரிக் ஓவரியன் சின்ரோம் ஒரு பரவலான காரணியாகக் காணப்பட்டாலும் ,வாழ்க்கைமுறையை மாற்றியமைத்தல் மற்றும் பொருத்தமான சிகிச்சை மூலம் கருத்தரித்தல் தாமதமடைவதை வெற்றிகொள்ளலாம். சில பெண்களுக்குத் துரதிர்ஷ்டவசமாக மாதவிடாய் 40 வயதுக்கு முன்னரே நின்றுவிடுகின்றது. சில பரம்பரை அலகுகளுடன் தொடர்புடைய பிரச்சினை உள்ள பெண்களிலும் (Tunrners Syndrome) குறைந்த வயதில் மாதவிடாய் நிறுத்தம் ஏற்படுவதுடன் முட்டைவிருத்தியடைதல் இல்லாமல் போகின்றது. எனவே இவர்கள் செயற்கைமுறைக் கருக்கட்டல் முறை (IVF) முட்டைதானம் (Donour egg) மூலமே கருத்தரிக்கும் சந்தர்ப்பம் உள்ளது.

பெண்களில் கருத்தரித்தல் தாமதடைவதற்கு பலோப்பியன் குழாய் சார்ந்த காரணிகளும் கணிசமானபங்குவகிக்கின்றன. பலோப்பியன் குழாயில் உள்ள பிரச்சினைகள் பொதுவாக பரிசோதனை மூலமே கண்டறியப்படுகின்றது. அத்துடன் . இதில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது கடினமானதாகும். சத்திரசிகிச்சைமுறை மூலம் சில சந்தர்ப்பங்களில் பலோப்பியன் குழாயில் உள்ள அடைப்புகளையும் ஒட்டுதல்களையும் சீர்செய்யமுடியும். இந்தச்சத்திரசிகிச்சைகள் கடினமானதாவும் ,வினைத்திறன் குறைவானதுமாகவே காணப்படுகின்றன. எனவே, இந்தப்பிரச்சினைஉள்ளவர்கள் செயற்கைமுறைக் கருக்கட்டல் (IVF) முறையை நாடுவது சரியானதும் ,வினைத்திறனாகவும் காணப்படுகிறது.

அடுத்து,கருப்பை சார்ந்த சில காரணிகளும் கருத்தங்கலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றில் கருப்பையில் ஏற்படும் பைபிரோயிட் கட்டிகள் ,பிறப்பில் இருந்து காணப்படும் கருப்பைக் கட்டமைப்புப் பிரச்சினைகள் ,கருப்பை உட்சுவரில் ஒட்டுப்படுதல் மற்றும் கருப்பையின் உட்சுவரில் உள்ள தசைக்கட்டிகள் அல்லது 'பொலிப்'என்பவற்றைக் குறிப்பிடலாம். எனினும் இவை எப்பொழுதும் கருத்தங்கலிற் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. பொதுவாக கருப்பையில் உள்ள மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு முறையான மருத்துவ ஆலோசனை மற்றும் மதிப்பீட்டின் பின்னரே சிகிச்சைஅளிக்கவேண்டும். ஏனெனில் சிலசந்தர்ப்பங்களில் இந்தச் சிகிச்சை முறையானது கருத்தங்கலில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். சத்திரசிகிச்சை முறை மூலமே பொதுவாக இந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது. எனவே இந்தச் சத்திரசிகிச்சை முறையானது மிகவும் அவதானமாக,திறன்மிக்க நிபுணர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

கருப்பை தொடர்பான பிரச்சினைகளில் மிகவும் பொதுவான பிரச்சினையான பைபிறொயிட் கட்டியைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம். பைபிறொயிட் கட்டியென்பது கருப்பையில் உள்ள தசையில் இருந்து உருவாகின்ற புற்றுநோயற்ற கட்டியாகும். சாதாரணமாக இனப்பெருக்க வயதில் உள்ள 20 சதவீதமானபெண்களில் அண்ணளவாகக் காணப்படுகின்றது. இந்தக்கட்டிகள் பெரும்பாலான பெண்களில் எந்தவிதமான அறிகுறிகளையும் ஏற்படுத்துவதில்லை. இருப்பினும் இந்தக் கட்டிகள் மாதவிடாயின் போது அதிக இரத்தப்போக்கு, அதனால் ஏற்படும் குருதிச் சோகை,வயிற்று நோ, வீக்கம், இவை சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீர் வெளியேறும் பாதையில் அழுத்தத் தொடங்குவதனால் சிறுநீர்கழிப்பதில் பிரச்சினை ஏற்படும். பைபிரோயிட் கட்டிகளை, ஸ்கான் முறை மூலம் உறுதிப்படுத்துவதுடன் ,கட்டிகளின் அளவு அமைவிடம் என்பவற்றைஅறியமுடியும். இந்தக்கட்டிகள் எப்பொழுதும் கருத்தங்கலில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. இருப்பினும் சிலசந்தர்ப்பங்களில் கருப்பையின் உட்பதித்தல் பாதித்தல் ,தொடர்ச்சியான கருச்சிதைவுகள் என்பவற்றுக்குக் காரணமாகின்றது. இதனால் சரியான மருத்துவஆலோசனையுடன் சத்திர சிகிச்சை முறை மூலம் இந்தக்கட்டிகளை அகற்றமுடியும்.

அடுத்து,பெண்களில் குழந்தையின்மைக்கு முக்கிய காரணமாக காணப்படுவது என்டோமற்றியோசிஸ் (endometriosis) ஆகும். கருப்பை உட்சுவரில் உள்ள கலங்கள் , இழையங்கள் இடுப்புக்குழியினுள் பல்வேறு இடங்களிலும் , சூலகத்திலும் காணப்படுவதால் இந்நிலைமைஉண்டாகின்றது. பொதுவாக இந்நோய் உள்ள பெண்களில் பலோப்பியன் குழாய் ,சூலகம் ,கருப்பை,குடல் என்பவற்றோடு ஒட்டுப்படுவதால் அடைபடுவதுடன் சரியாக முட்டை அசைந்து விந்தைச் சந்திப்பதையும் தடுக்கின்றது. மற்றும் சூலகத்தில் ஏற்படும் என்டோமற்றியோஸ் கட்டிகள் (endometriosis my;yJ Chocolate cyst) தரமான முட்டைகளை உருவாக்குவதில்லை. என்டோமற்றியோசிசில் உள்ள பெண்களுக்கு மாதவிடாயின் போதுஅதிகமாக வயிற்றுவலி காணப்படும். இதைவிட,உடல் உறவின் போது வலி,சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும் போது வலி என்பனவும் ஏற்படலாம். இதற்கு சத்திரசிகிச்சை மூலமும் மருந்துகள் மூலமும் சிகிச்சை அளிக்கமுடியும். ஆயினும் மருந்துகள் மூலம் அளிக்கப்படும் சிகிச்சையானது கருத்தங்கலை பெரிதும் அதிகரிக்காது. மேலும் சத்திரகிசிச்சையின் பின்னர் சில ஊசிமருந்துகள் என்டோமற்றியோசிஸ் வளர்ச்சியைக்கட்டுப்படுத்தி குழந்தையின்மை சிகிச்சைக்கு உதவுகின்றது. லப்பிரஸ்கோப்பி சத்திரசிகிச்சை முறையானது, இந்தப்பிரச்சினைக்கான முக்கியசிகிச்சை முறையாகும். இதன்போது இடுப்புக்குழியில் உள்ள என்டோமற்றியோசிஸ் இழையங்கள் சூலகத்தில் உள்ள கட்டிகள் அகற்றப்படுவதுடன் இழையங்களின் ஒட்டுதல்களையும் அகற்றமுடியும். இதனால் அவர்களுக்கு வலி குறைவடைவதுடன் கருத்தங்கலைஅதிகரிக்கவும் வாய்ப்பேற்படுகின்றது. இதற்குமேலதிகமாகச்,செறிவாக்கப்பட்ட விந்துக்களைக் கருப்பையினுள் உட்செலுத்தும் (IUI) முறையானது என்டோமற்றியோசில் உள்ள பெண்களில் கருத்தங்கலை அதிகரிக்கச் செய்கின்றது. இந்தச் சிகிச்சைகள் வெற்றியளிக்காத தம்பதியினர் ,சரியான ஆலோசனையுடன் செயற்கைமுறைக் கருக்கட்டல் (IVF) சிகிச்சைக்கு செல்வது மிகவும் வினைத்திறனானது.



**குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்**

பெண்களுக்கான காரணிகளால் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதமானது ஆண்களுக்கான காரணிகளால் ஏற்படும் தாமதத்தினைப் போலவே அண்ணளவாக 30 % ஆகும். ஆகவே தம்பதியினருக்குச் சிகிச்சையளிக்கும் போது உளவளத்துணையும் அவசியமாகின்றது. சிறந்த உளநலம் மற்றும் ஆரோக்கியமான உடல்நலத்துடன் கூடிய ஒரு வாழ்க்கைமுறையானது எல்லாவிதமான சிகிச்சைமுறையின் வெற்றிக்கும் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தும் என்பதால் ,தம்பதியினர் சிகிச்சை எடுத்துக் கொள்ளும் காலப்பகுதியில் உடல் மற்றும் உள நலத்திலும் விசேடகவனமெடுத்தல் அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமேஷ்

# தமிழ்க்கவி பாரதி!

**பாரதியாரின் 100ஆவது நினைவு தினம் இன்றாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

கவிஞன், ஊடகவியலாளன், விடுதலைப் போராளி மற்றும் மொழிபெயர்ப்பாளன் என பன்முகங்களை வெளிப்படுத்திய சுப்பிரமணியன் முப்பத்தொன்பது வருடங்கள் மாத்திரமே வாழ்ந்து தன்மூச்சை நிறுத்தி இற்றைக்கு நூறாண்டுகளாகிறது. இருப்பினும் பாரதியின் தமிழ் மூச்சை இற்றை வரையிலும் காலனால் நிறுத்த முடியவில்லை. சுப்பிரமணியன் 1882ஆம் ஆண்டில் பிறந்து 1921ஆம் ஆண்டில் இவ்வுலகை நீத்தார். 11 வயதிலேயே தனித்துவமான தமிழ்க் கவிபாடும் வல்லமையினால் எட்டயபுர புலவர்களினால் 'பாரதியார்' எனப் போற்றப்பட்டார்.

மொழிப்பற்றாளனாக தேச விடுதலை, மூட நம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை மற்றும் அடிமை ஒழிப்பு எனப் பல்வேறு தளங்களில் தன்னை நிலைநிறுத்தி கவி பாடியவர் பாரதியார். 'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே!' என இலகு இலக்கணத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடியருளிய முதல் கவிஞன் பாரதியாவான். பாரதியார் கண்ட கனவு மெய்ப்படவே கரைகள் பல கடந்து இன்றும் தமிழ் தன் மணம் வீசிக்கொண்டிருக்கின்றது. ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரஞ்சு, மராட்டி மற்றும் ஹிந்தி ஆகியவற்றில் பாரதி புலமை கொண்டிருந்தாலும்

*'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்கும் காணோம்.*
*யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,*
*வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'*

எனத் தமிழுக்கும் தமிழ் ஆன்றோருக்கும் வலிமை சேர்த்த பெருமை பாரதியுடையதாகும். இன்ன பிற மொழிகளையும் கற்பதோடு அவற்றின் நன்னூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து தமிழ் வளர்க்கும் தலையாய பொறுப்பை இளம் தலைமுறையிடம் ஒப்படைத்துச் சென்றார் பாரதி.

*'எந்த நிறமிருந்தாலும் அவை*
*யாவும் ஒரே தர மன்றோ?*
*இந்த நிறம்சிறி தென்றும்இஃது*
*ஏற்ற மென்றும் சொல்லலாமோ?'*

எனச் சிறியவர் முதல் அனைவரும் தமிழ் அமுதை பருகும் வண்ணம் இலகுவான இலக்கியணத்தைப் பரிசளித்தமை பாரதியின் தனித்துவமாகும். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்திட வேண்டும் எனப் பெண் விடுதலையின் அவசியத்தை தன் புதுக்கவியால் சமூகத்துக்கு உணர்த்தியவர். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என பெண்களை அடிமைப்படுத்துவோரை அறிவிலார் என விளித்தார். நெருப்பினைக் கக்கும் இவ்வரிகள் இன்றும் உயிர்ப்புடனுள்ளன. 'பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி பேணி வளர்த்திடும் ஈசன்' எனும் உண்மையைச் சொல்லவும் மறந்துவிடவில்லை.

*'நாலு வகுப்பும்இங் கொன்றேஇந்த*
*நான்கினில் ஒன்று குறைந்தால்*



*வேலை தவறிச் சிதைந்தே -செத்து*
*வீழ்ந்திடும் மானிடச் சாதி'*

என முழங்கி சமூக விடுதலைக்காக தான் பிறந்த குலத்தின் சம்பிரதாயங்களைத் துடைத்தெறிந்து புது விதிசெய்தார். சமூக மாற்றத்தை தன்னிலிருந்தே உருவாக்கும் பொருட்டு முண்டாசை அணிந்து மீசை வளர்த்து தன் தோற்றத்தினையே மாற்றிய உதாரண புருஷர். யாவரும் சமானமானவர்கள் என்றும் ஒவ்வொருவரும் தமது தனித்துவமான ஆற்றல்களினால் மட்டுமே வேறுபட்டுள்ளனர் என்றும் சமத்துவம் பேசினார். ஆக ஒற்றுமையே மானிடச் சாதிக்கு பலமாகும் என்பதனை எம் இளைய தலைமுறைக்கு உணர்த்திச் சென்றுள்ளார்.

*'மனம் மகிழ்ந்து கூடியே*
*மனிதர் யாரும் ஒரு நிகர்*
*சமானமாக வாழ்வமே!'*

என எம் நெஞ்சை அன்போடு வருடுகிறார். பிரிவினைகளால் துயர் மட்டுமே மிஞ்சும் என்பது நாம் கண்ட படிப்பினையாகும். 'நேத்திரங் கெட்டவன் காலன் தன்முன் நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்' என பாரதி அப்போதே பாடியதை நாம் இப்பெருந்தொற்றிலும் உணர்ந்துவிட்டோம். ஆக பாரதியின் வழி வேறுபாடுகளைக் களைவதே எம் இளம் தலைமுறையினர் படைக்கும் புதுவேதமும் ஆகும். சோம்பல் முறித்து தொழில் செய்திட வேண்டும் என்பதனை ஒரு நூற்றாண்டுக்கு முன்னமே 'கஞ்சி குடிப்பதற்கிலார் அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்' என வலியுறுத்தினார். பிறர் கதை பேசித் திரிவதால் காலம் வீணாகும் என்பதே அதன் பொருளாகும்.

அடிமைத்தனத்துக்கு எதிராக முழங்கிய பாரதி பிஜித் தீவின் தேயிலைத் தோட்டங்களில் நசுக்கப்பட்ட தமிழ், இந்தி, வங்காளம் பேசிய மக்களுக்காகவும் மொரீசியஸ், தென்னாபிரிக்கா மற்றும் மலேசியா போன்ற தேசங்களிலும் தங்கள் உதிரத்தை உரமாக்கிய அடிமைகளுக்காகவும் மனம் இரங்கிப் பாடத் தவறவில்லை 'ஏழைகள் அங்கு சொரியுங் கண்ணீர் வெறும் மண்ணிற் கலந்திடுமோ?' என அவர் துயர் உலகறியச் செய்தார்.

இத்தாலியின் மாஜினி புகழைப்பாடவும் ஜேர்மனியிடம் வீழ்ச்சி பெற்ற பெல்ஜியத்தை வாழ்த்திப்பாடவும் பாரதி மறக்கவில்லை. 'அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்!'என்று பாடி ஓர் சர்வதேச கவியாகிறார் பாரதி.

பாரதியொரு இயற்கைக் காதலனும் மாபெரும் இறைக் காதலனுமாவான். 'காணி நிலம் வேண்டும் பராசக்தி பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம் பக்கத்திலே வேணும்' என்ற வரிகள் மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்வதன் அவசியத்தை உணர்த்துகிறது. இன்றைய காலநிலை மாற்றமும் இதனையே வலியுறுத்துகிறது. இங்கே பாரதியின் முற்போக்குச் சிந்தனை வெளிப்படுகிறது.

தன் வாழ்விலும் நேர்படப் பேசியதனால் எட்டயபுர சமஸ்தானத்திலிருந்து வெளியேறினார். இவ்வாறு சரி நிகராய் தன் பார்வையை செலுத்திய பாரதியின் மீதான விமர்சனங்களுக்கான நகைப்பு பாரதியின் கவிதைகளிலேயே உள்ளது. 'ஆரியராம் என்று இங்கு ஏதடா சங்கம்' 'நல் ஆரிய ராணியின் வில்' இங்கு ஆர்ய என்பதன் பொருள் கல்வியிற் சிறந்தவர், குணத்தில் உயர்ந்தவர், மேம்பட்ட ஆட்சிபுரிபவர் என்பதாகும். அதே போன்று 'வர்ணம்' என்பதற்கு உருப்படி என்ற பொருளும் உண்டு. கப்பலோட்டிய தமிழன் வா.உ.சிக்கு வலிமை சேர்க்கும் வண்ணம் 'மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்' என்ற முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்தினார். 'ஆக மெல்லத் தமிழினிச் சாகும்' என்பதனை மாத்திரம் வாசித்துவிட்டு 'என்றந்தப் பேதையுரைத்தான்' என்ற அடுத்த வரியை மறந்து விம்முதல் பரிதாபமாகும்.

> **"மொழிப்பற்றாளனாக தேச விடுதலை, மூட நம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை மற்றும் அடிமை ஒழிப்பு என பல்வேறு தளங்களில் தன்னை நிலைநிறுத்தி கவி பாடியவர் பாரதியார். "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே!" என இலகு இலக்கணத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடியருளிய முதல் கவிஞன் பாரதியாவான். பாரதியார் கண்ட கனவு மெய்ப்படவே கரைகள் பல கடந்து இன்றும் தமிழ் தன் மணம் வீசிக்கொண்டிருக்கின்றது."**

ஆகவே வியத்தகு சிந்தனையாளனான பாரதியின் எண்ணங்களுக்கு செயலுருக் கொடுப்பது எம் கடமையல்லவா? தமிழ்ப் பற்றுக்கொண்ட ஒப்பற்ற கவிஞனின் வழியில் தமிழ் வளர்க்கும் பணி எம் தலைமுறையிடம் அளிக்கப்பட்டுள்ளது. 'எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்' என்ற நம் கடமை அறிவோம் தமிழா!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** நல்ல செய்தி வருவதில் தாமதம் ஏற்படும். நிம்மதியான நாள். புதிய வாகனம், வீடு வாங்கும் யோகம் உண்டாகும் சற்று குழப்பத்துடனும், மன உளைச்சலுடனும் காணப்படுவீர்கள். மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**இடபம்:** அமைதியும் நிம்மதியும் நிறையும். தாயால் நன்மை வரும். பேச்சினால் பிரச்சினையில் மாட்டிக் கொள்ள வேண்டாம். வாகனத்தைச் சீரமைப்பீர்கள். வேலைப்பளு அதிகமாகும்.

**மிதுனம்:** வருமானம் உயரும். உறவினர்களின் பொறாமை வெளிப்படும். மிதமான நலன்கள் உண்டு. யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். குழந்தைகளை மகிழ்வித்து மகிழ்வீர்கள்.

**கடகம்:** குடும்பம் மகிழும். உயரிழந்தோரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். செல்வம் சேருவதில் தாமதம் ஏற்படும். வீடு மாற வாய்ப்புள்ளது. உங்களது பேச்சினால் குடும்பத்தினருக்கு நன்மை ஏற்படும்.

**சிம்மம்:** கடந்த காலச் செய்கை ஒன்று பற்றிய மனஉறுத்தல் நீங்கும். நீங்கள் தேடிக் கொண்டிருந்த நல்ல வாய்ப்பு தானாக வரும். இளைஞர்கள் பாராட்டுகளைப் பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கன்னி:** உடல்நலம் சீராகும். தன்னம்பிக்கை கூடும். பழிகள் அகலும். பெரியோரின் செயல்கள் மூலம் நன்மை அடைவீர்கள். குடும்பத்தில் யாருக்கேனும் திருமணம் நிச்சயமாகும்.

**துலாம்:** தவறான நபர்கள் தானாக விலகிப் போவார்கள். புதிய விடயம் ஒன்றைக் கற்று பலன் அடைந்து மகிழ்வீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைத்து நன்மை அடைவீர்கள்.

**விருச்சிகம்:** சருமம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மருத்துவம் மூலம் அகலும். குடும்பத்தில் பலநாள்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த விடயம் நடைபெறும்.

**தனுசு:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆதரவு பெருகும். சகோதர, சகோதரியுடன் ஒற்றுமை பிறக்கும். மனம் மகிழும். பாராட்டுப் பெறுவீர்கள்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி தங்கும். தந்தைக்கு நன்மை உண்டாகும். மனதில் தன்னம்பிக்கை துளிர்விடுவதால் வெற்றி பெறுவீர்கள். உற்சாகம் கூடும்.

**கும்பம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அமோகமான நாள். பணியில் தடைகள் வரலாம். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**மீனம்:** பணியிடத்தில் நீங்கள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். எதிலுமே தடைகளும், தாமதங்களும் இருந்து பின் சரியாகும். பிறரிடம் பேசும் போது அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம்.



# சந்திரமுகி – 2 இல் லாரன்ஸ் – வடிவேலு?

ரஜினி 2005 ஆம் ஆண்டு நடித்து வெளியாகிப் பெரு வெற்றி பெற்ற படம் 'சந்திரமுகி'.
பி.வாசு இயக்கிய இந்த படத்தில் ரஜினியுடன் பிரபு, ஜோதிகா, நாசர், வடிவேலு, நயன்தாரா, மாளவிகா உட்பட பலர் நடித்திருந்தனர்.
இதில் ரஜினியுடன் வடிவேலு இணைந்து நடித்த காமெடி காட்சிகள் இன்றளவும் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன.
இந்நிலையில், இயக்குநர் பி.வாசு அடுத்ததாக இயக்க உள்ள சந்திரமுகி படத்தின் 2ஆம் பாகத்திலும் வடிவேலு நடிக்க உள்ளதாக தகவல் பரவி வருகிறது.
முதல் பாகத்தை போல் இரண்டாம் பாகத்திலும் நகைச்சுவை முக்கிய பங்கு வகிக்கும் எனக் கூறப்படுகிறது. விரைவில் இது குறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
அத்துடன் சந்திரமுகி படத்தின் 2ம் பாகத்தில் ராகவா லாரன்ஸ் ஹீரோவாக நடிக்க உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
சன் பிக்சர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்க உள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பை எதிர்வரும் டிசெம்பர் மாதம் தொடங்கத் திட்டமிட்டுள்ளார்களாம்.






## twitter

கவிதை திருடி@
மரியாதை வயசுக்கானதல்ல நடத்தைக்கானது

மௌனவிரதம்@
மாஸ்க் போட்ட பிறகு சிரிக்கிறாங்களா.. உம்முனு இருக்காக்களான்று தெரிய மாட்டிங்கிது....

ச ப் பா ணி@manipmp
சுகரற்ற வாழ்வே
நிகரற்ற செல்வம்

இமயா @PiriyaalM
வலியைப் பொறுத்துக் கொள்வதில் யாருக்கும் பெரிய அளவில் சிரமம் இல்லை. காட்டிக்கொள்ளாமல் இருப்பதில் தான் சிரமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்ததில் பிடித்தது




பிள்ளைகள் பெண்ணாக
பிறந்து விட்டதே
தங்கம் வாங்கிச் சேர்க்கவேண்டும்
நிலம் வாங்கிச் சேர்க்க வேண்டும்
செலவைக் குறைத்து
சேமித்த பணத்தை
வங்கியில் சேர்க்க வேண்டும் என்று
ஏங்கித் தவிக்காதீர்கள்

தூக்கம் மறந்து துவளாதீர்கள்
துக்கம் கொள்ளாதீர்கள்
நீங்கள் ஆற்ற வேண்டியது
ஒன்றே ஒன்று தான்
பெண் பிள்ளைகளுக்கு
நல்ல கல்வியைக் கொடுங்கள்

எதையும் எதிர்த்து
ஏறி மிதித்து வாவென்று
தன்னம்பிக்கையைக் கொடுங்கள்
விரும்பிய படிப்பைப் படிக்க வையுங்கள்
தற்காப்புக் கலைகள் சொல்லி கொடுங்கள்
இன்னொரு வீடு
இல்லத்தரசியாக வாழப் போறவள் என்று
சமையல் பழக்குவதை விடவும்
தையல் பழக்குவதை விடவும்
பிரச்சினைகளின் போது
எப்படி மீள வேண்டும்
பிரிவுகளின் போது
தனித்து எப்படி வாழ வேண்டுமென்று
தைரியத்தை சொல்லிக்கொடுங்கள்

பெண்ணுக்கு அறிவை விடவும்
தங்கமோ நிலமோ பெரியதில்லை
படிப்பிருந்தால்
தங்கமும் நிலமும் பணமும்
தானாய் வந்து கதவு தட்டும்
உங்கள் வளர்ச்சியைக் கண்டு
உலகம் கைகள் தட்டும்



தேசிய கீதத்துல " ஶ்ரீ லங்கா #மா தா " என்பதன் அர்த்தம் இப்பதான் புரியுது ✌
#Anchor



ஆனால் வோட்டு போட்ட 6.9 மில்லியன் பேரோட கோவணத்தையும் உருவி நடுத்தெருவில விட்டாய் பாரு. கில்லினே நீ ....

# மனிதாபிமானச் செயற்பாடுகளில் கொரோனாவை மறந்துவிடாதீர்கள்

## யாழ். மக்களுக்கு பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்து

**கொழும்பு, செப். 11**

**"நாட்டின் தற்போதைய நெருக்கடிமிக்க சூழலில் மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலையும் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டியது அவசியம்."**

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட மக்களிடம் கேட்டுக்கொண்டார், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியச்சர் நிஹால் தல்துவ.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேகக் குரல் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், நபர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்ததையடுத்து அவரது இறப்பு வீட்டுக்கு அதிகளவானோர் சென்றிருந்தனர்.

குறித்த நபரின் திடீர் இறப்பு உளவியல் ரீதியிலான தாக்கத்தை அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. சிறந்த முறையில் வாழ்ந்து இறந்தவராக அவர் அந்தப் பிரதேசத்தில் மதிக்கப்படுகின்றார்.

பிரதேச மக்களுடன் நல்லுறவைப் பேணி வந்துள்ளார். இதன் காரணமாகவே அவரது இறப்பு வீட்டுக்கு அதிகளவானோர் சென்றுள்ளனர் என்பது பொலிஸ் தரப்பு கருத்தாக உள்ளது.

குறித்த நபருக்கு நாமும் கௌரவமளிக்க வேண்டும். அதேபோன்று மற்றுமொரு சம்பவம் பதிவாகியிருந்தது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், நபர் ஒருவர் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிமிக்க சூழலைக் கருத்தில்கொண்டு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதியுதவி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

இது உண்மையில் மனிதாபிமான ரீதியான செயற்பாடு. ஏனெனில், சமூகசேவகர் என்ற ரீதியில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் உதவுவதற்காக முன்னின்று அவர் செயற்பட்டுள்ளார். எனவே, அவருக்கு நாம் கௌரவமளிக்க வேண்டும். இவ்விரு சந்தர்ப்பங்களுக்கும் முதலில் நாம் மதிப்பளிக்க வேண்டும். எனினும், நாம் புரிந்து கொள்ளவேண்டிய ஒரு விடயம் உள்ளது.

தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று மிகவும் பயங்கரமான நோய்த்தொற்று மக்கள் மத்தியில் பரவி வருகின்றது.

நோய்த்தொற்றுக் காவிகளாக மக்களே உள்ளனர். எனவே, இந்தத் தொற்றானது ஒருவரிடமிருந்து மற்றுமொருவருக்குப் பரவக்கூடும். ஒருவருக்குத் தொற்றுப் பரவினால் அவரது குடும்பத்தினர், அயலவர்கள் உள்ளிட்ட அனைவரும் பாதிப்பை எதிர்கொள்வர்.



இவ்வாறான மனிதாபிமானச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது பொலிஸார் அந்த இடத்துக்கு வந்து தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை நடைமுறைப்படுத்த நேர்ந்தால் அது எமக்கும் வருத்தமளிக்கின்றது.

எனினும், சட்டஒழுங்கு விதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது எமது பொறுப்பு. எனவே, சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு நாம் மக்களைக் கோருகின்றோம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுமாறே நாம் பொதுமக்களைக் கோருகின்றோம்" என்றார். (த-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### விசாரணை....

வருகின்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே, ஐ.நா. சபையானது, சித்திரவதைக்குள்ளானவர்களைச் சந்தித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியதுடன், அவர்களை கௌரவிக்க வேண்டியநேரம் வந்துவிட்டது.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், முன்னாள் முதலமைச்சரும் நீதியரசரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன்.

'தொடரும் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை' என்று தலைப்பிட்டு ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு அனுப்பிய கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய கடிதத்தின் சாராம்சம் வருமாறு,

கடந்த 8 ஆம் திகதி ஐ.நாவுக்கு அனுப்பப்பட்ட எனது கடிதம் அவசரமாக எழுதப்பட்டது என்பதால் எல்லா விடயங்களையும் குறிப்பிட முடியவில்லை. நேரம் குறைவாக இருந்தாலும், ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் கவனத்துக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக இந்த மேலதிக கடிதத்தை எழுதுகிறேன். எனது முந்தைய கடிதத்தில் ஓர் இணைப்பாக இந்தப் பகுதியைச் சேர்க்கிறேன்.

இலங்கையில் பொலிஸார் மற்றும் இராணுவம் தொடர்ந்து தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்துவருவதற்கான அதிக ஆதாரங்கள் உள்ளன. தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு துன்புறுத்தப்படுகிறார்கள். சமீபத்திய நாள்களில் சமூக ஊடகங்களில் அவர்கள் தாக்கப்பட்டமையையும் அவர்கள் காயப்பட்டுள்ளமையையும் காட்டும் ஒளிப்படங்கள் வெளிவந்துள்ளன. நான் முன்பு கூறியதுபோல் பிரிட்டனிலுள்ள சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் (ஐ.ரி.ஜே.பி.) சித்திரவதை செய்யப்பட்டவர்களை விசாரணைசெய்து, ஆதாரங்களை ஆவணப்படுத்தி வருகிறது. அவர்களால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் நடைபெற்றுவரும் சித்திரவதைகளின் கொடூரமான விவரங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பாதுகாப்புப் படையின் தடுப்புக்காவலில் உள்ள இந்த இளைஞர்களுக்கே இந்த சித்திரவதைகள் நடக்கின்றன.

ஒவ்வொரு முறையும் இத்தகைய தகவலைப் பெறும்போது ஐ.நா. செய்வதெல்லாம், சித்திரவதையை பற்றி விசாரிக்கவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ இல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் தமது அறிக்கையில் சுருக்கமாக குறிப்பிடுவதோடு மட்டும் நிறுத்திவிடுகிறார்கள் என்பதை நான் மிகவும் மரியாதையுடனும் வருத்தத்துடனும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை பற்றி ஓ.எச்.சி.எச்.ஆர். தைரியமாகப் பேசுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து அவர்களை, கௌரவிப்பதற்குமான நேரம் வந்துவிட்டது." என்று குறிப்பிட்டுள்ளார். (த)

### மயங்கி வீழ்ந்த...

உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மீசாலை கிழக்கு பகுதியில் நேற்றுமாலை 6.30 அளவில் இடம்பெற்றது.

மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 42 வயதுடைய பிரகலாதன் நேசபாமா என்பவரே உயிரிழந்தவராவார்.

சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவதற்காக சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (த-159)

### அரச அலுவலர்கள்...

கடந்த 7ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது அவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அவர், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

அந்த அதிகாரியின் வாகன சாரதியும் அவருக்கு உதவி செய்தவரும் தங்களை தனிமைப்படுத்திக்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 4 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 8ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேநாளில் மல்லாவி பிரதேசத்துக்கு உட்பட்ட இரண்டு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றும் சுமார் 20க்கும் மேற்பட்டவர்கள் கொரோனா அறிகுறிகளுடன் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-19)

### மகனைத்....

எனும் முகவரியில் வசித்து வந்த செபமாலை இராசதுரை என்பவரே காலமானார்.

2009ஆம் ஆண்டு போர் இறுதிக்காலத்தில் ஓமந்தை சோதனைச் சாவடியில் இவரது மகனான இராசதுரை விஜி இராணுவத்தினரிடம கையளிக்கப்பட்டிருந்தார். ஆயினும், கடந்த 12 ஆண்டுகளாக மகன் பற்றிய தகவல் ஏதும் அறியாமல் நேற்று அவர் உயிரிழந்தார்.

வவுனியாவில் ஆயிரத்து 668 நாள்கள் கடந்தும் நடைபெற்றுவரும் "காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கேட்கும் தொடர் போராட்டத்தில்" தனது முதுமைக் காலத்திலும் செபமாலை இராசதுரை கலந்துகொண்டிருந்தார். (த-110)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



இராமநாதன் முத்தையா

அன்னை மடியில் 09.07.1928

அம்பாள் திருவடியில் 23.08.2020

திதி: ஆவணி மாத பூர்வபக்க பஞ்சமி (11.09.2021)

ஓராண்டு நகர்ந்தாலும்
எம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் ஐயா
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களிலும் குடியிருக்கும்
எம் தந்தையை நாம் என்றென்றும்
நினைத்திருப்போம்.

ஐயாவின் ஆத்மா அம்பாளின் பாதத்தில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

குடும்பத்தினர்.
6ம் வட்டாரம், நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### வரதராசா புவனேஸ்வரியம்மா



ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட நாராயணசாமிகுருக்கள் சரஸ்வதிஅம்மாள் அவர்களின் பாச மிகு மகளும், இரத்தினசாமி குருக்கள் வடிவாம்பிகை அவர்களின் அன்பு மருமகளும் வரதராசாவின் அன்பு மனைவியும் ஆகிய வரதராசா புவனேஸ்வரியம்மா அவர்கள் (07.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்தில் (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**T.நிர்மலா**
**புத்தூர் மேற்கு, நவக்கிரி.**

## ஆழ்ந்த அனுதாபங்கள்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்தியில் அதீத அக்கறை எடுத்து பெரும் நிதி உதவி செய்த சாவகச்சேரி கோயில் குடியிருப்பு "கவமதி" என்னும் முகவரியை சேர்ந்த
**பொன்னம்பலம் நவரத்தினம் குடும்பத்தின் தலைவி**

### திருமதி நவரத்தினம் கோமதியம்மா

**(முன்னாள் ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்**
**சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி



வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவரான

**செல்லத்துரை சுப்பிரமணியம் (J.P)**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபையினர்**
**வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்.**

## கண்ணீர் அஞ்சலி



வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்தி கழகத்தின் முன்னாள் தலைவரான

**செல்லத்துரை சுப்பிரமணியம் (J.P)**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

**சைவசமய அபிவிருத்தி கழகத்தினர்.**

## துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 03.04.1952 இறப்பு 09.09.2021

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி**
**விஜியந்தி சதீஸ்வரன்**
அவர்களின் அன்பு மாமனார்

### கந்தையா சுப்பிரமணியம்

அவர்களின் மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்**


# கொரோனாச் சடலத்தின் 'சீல்' உடைக்கப்பட்டதா?

*மல்லாவியில் சர்ச்சை*

மந்திகை மருத்துவமனையில் இருந்து மல்லாவி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட கொரோனாத் தொற்றாளர் ஒருவரின் சடலம், அதனை மூடிச் சுற்றப்பட்டிருந்த பாதுகாப்பு உறையை( சீல்) உடைத்து பார்வையிடப்பட்ட சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
மல்லாவியைச் சொந்த இடமாகவும் , யாழ்ப்பாணம் , பருத்தித்துறையில் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட81 வயது மூதாட்டி ஒருவர் கடந்த 2 ஆம் திகதி கொரோனாவால் உயிரிழந்திருந்தார். அவரது சடலம் பருத்தித்துறை ( மந்திகை) ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகளவு சடலங்களை அங்கு வைத்திருக்க முடியாதகாரணத்தால், மேலதிக சடலங்களை மல்லாவி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அந்தவகையில் குறித்த மூதாட்டியின் சடலமும் மல்லாவிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவ்வாறு அனுப்பப்படும் போது, மந்திகை மருத்துவமனையில் குறித்த சடலம் பாதுகாப்பு பொலித்தீன் உறையில் இடப்பட்டு, சீல் வைக்கப்பட்டே அனுப்பப்பட்டது. ஆயினும் மல்லாவியில் அந்தச் சடலத்தின் சீல் அகற்றப்பட்டு, பொலித்தீனுக்குள் இருந்த சடலம் உறவினர்களால் பார்வையிடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.
இதுகுறித்த விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-19)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 10 . 1937



மறைவு 10 . 09 . 2021

### செல்லத்துரை சுப்பிரமணியம் (JP)

**(ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர், முன்னாள் தலைவர் - வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம், யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் மன்றம், உத்தரவுபெற்ற நில அளவையாளர் சங்கம் வடமாகாணம், முன்னாள் உறுப்பினர் பிரதேச செயலக பிரிவு மத்தியஸ்தர் சபை யாழ்ப்பாணம்)**

இல.424/ 01/01, கில்னர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (10.09. 2021) வெள்ளிககிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அம்மான் இராசமணி தம்பதியரின் மகனும், திருஞானசம்பந்தர் இராசம்மா தம்பதியரின் மருமகனும், பாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும், அமரர் தனபாலன் (பாபு, பாபுஜி), சந்திரகாந்தன் (காந்தன்-ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசித்திரா (சுதா), சேது ஆகியோரின் மாமனாரும், தர்மிகா, கிறேசான், கம்சிகா, துதீசன், அகிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான அரியநாயகம், பரமேஸ்வரி, நடராசா, நகுலேஸ்வரி மற்றும் பாலசுப்ரமணியம் (ஜெய கிருஷ்ணா ஜுவலறி), தியாகராஜா (ராசன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**424/ 01/01, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம்.**
**077 9024056**

**தகவல்:**
**சு.சிறிகாந்தன் (ராஜா)**
**மகன்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 08 . 1939



மறைவு 10 . 09 . 2021

### பத்மாவதி வைத்திலிங்கம்

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி வைத்திலிங்கம் நேற்று (10.09.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், நவமணி அம்மாளின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சொர்ணம்மாளின் மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற இராஜேந்திரம், காலஞ்சென்ற கமலாவதி, பாலேந்திரன், ராமச்சந்திரன் ஆகியோரின் மூத்த சகோதரியும், வாசுகியின் அன்புத் தாயாரும், சந்தான கோபாலனின் மாமியாரும், வசந்த், பிருந்தா, எழில்வேள், ஹர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும், விகானா, ஆதிரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**[illegible], K.K.S. வீதி,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செப்.21 வரை....

இதன்போது, நாட்டில் பதிவாகிவரும் தொற்றாளர்கள் மற்றும் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை உட்பட கொரோனா நிலைமை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது. அத்துடன், சுகாதாரத் தரப்புகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன.

அதன்பின்னர், தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன்படி செப்ரெம்பர் 21 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடரும்.

செப்ரெம்பர் 13 ஆம் திகதி காலை 4 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மேலும் இருவாரங்கள் அதனை நீடிக்குமாறு மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினரும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஊரடங்கு நடைமுறையில் இருந்தாலும் தற்போது அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கு முன்னர்போன்ற ஏற்றுமதி துறைசார் தொழிற்சாலைகள் சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் தொடர்ந்தும் செயற்பட முடியும். அனுமதி வழங்கப்பட்டுள்ள சேவைகளையும் முன்னெடுக்க முடியும். அதேபோல தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டமும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். என்று மேலும் தெரிவித்தார். (த-44)

### 21ஆம்...

ஏனைய விடயங்கள் தொடர்பில் விரிவானதொரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனா ஒழிப்பு செயலணிக்கூட்டம் நேற்று நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற்படி கோரிக்கையை, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விடுத்தார் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையிலுள்ள காலப் பகுதியில் நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் இயக்குவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. போயா தினத்தில் மாத்திரமே மேற்படி நிலையங்கள் மூடப்படும். (த-44)

### யாழில் 6 பேர்...

மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை14ஆயிரத்து 838ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற இணுவிலைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் ஒருவர் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும் போதனா மருத்துவமனை விடுதியில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 81 வயதுடைய பெண் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவரும் வீட்டில் உயிரிழந்த நிலையில் கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 322ஆக உயர்வடைந்துள்ளது. (த-20,26)

### நாட்டில் 131...

திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 512 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 9 ஆயிரத்து 628 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் 131 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 995 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 58 பெண்களும், 73 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-22)

### வவுனியா...

உறுதிப்படுத்தப்பட்டது. மருத்துவமனையில் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவந்தநிலையில், அவர் நேற்று உயிரிழந்தார்.

இதேவேளை, சுகவீனம் காரணமாக தத்தம் வீடுகளில் நேற்று உயிரிழந்த 5 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த-110)

### புலிகளின்...

அதன் தலைவர் இரா.சம்பந்தன் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடவேயில்லை.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா , நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அதன்போது கட்சி சார்பில் சுமந்திரன் தெரிவித்தமை வருமாறு-

தற்பொழுது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு விசமப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் விசாரிக்கக்கோரி சம்பந்தனால் ஒரு ஆவணம் அனுப்பப்பட்டது என்று கூறப்படுவது, முற்றிலும் ஒரு பொய்யான விடயம். ஆனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கையொப்பத்தோடு ஐ.நாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை விரைவில் வெளிப்படுத்துவோம்.

தற்பொழுது தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனியாகச் செயற்படப்போகின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறான ஒரு சம்பவம் ஒருபோதும் இடம்பெறாது. எந்தக் காலத்திலும் இலங்கை தமிழரசுக் கட்சியானது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுமே தவிர ஒருபோதும் தனித்துச் செயற்படுவதற்கு தயாராக இல்லை.

எந்தளவுக்கு இணைந்து செயற்பட முடியுமோ அந்தளவுக்கு இணைந்து செயற்படுகின்றோம். தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் எம்முடன் நல்ல உறவாக உள்ளார்கள். அவர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்படுகின்றோம் என கூறுகின்றார்கள்.

நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையாக செயற்படுகின்றோம். கூட்டாகச் ஏற்படும் போது பல பிரச்சனைகள் முரண்பாடுகள் ஏற்படும். ஆனால் தமிழ் மக்களுக்காக பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரிந்தோ அல்லது தனித்தோ செயற்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் ஒரு சாரார் தனித்து ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அவ்வாறு தனியான கடிதம் எதுவும் அனுப்பவில்லை. தமிழ் தேசியத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற அமைப்பின் பெயரில் 9 பேரின் கையொப்பத்தோடு, அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அப்படியொரு அமைப்பு இருப்பதாக எனக்கு தெரியாது. அப்படியொரு அமைப்பு ஒருபோதும் உருவாக்கப்படவில்லை. எங்களுக்கும் தெரியாது, எவருக்கும் தெரியாது. அதில் கைச்சாத்திடப்பட்டதாக சொல்லப்பட்ட சிலர், தாம் அப்படியொன்றும் அனுப்பவில்லையென முதல்நாளே மறுப்பறிக்கை வெளியிட்டு விட்டனர். அதனால் வெளியான ஆவணத்தின் உண்மைத்தன்மை குறித்து எமக்கு தெரியாது. உண்மையானதா, யாராவது போலிக் கையெழுத்தெல்லாம் போட்டு தயாரித்தார்களா என்பது தெரியாது.

ஐ.நா.வுக்கு அனுப்பிய பழைய ஆவணங்களில் இருந்து தமது கையெழுத்தை எடுத்து, இதில் இணைத்திருக்கலாம் என ஒரு சிலர் எம்மிடம் தெரிவித்துள்ளனர். அப்படியானால் அது பாரதூரமானது.அவ்வாறு ஒருவரின் கையொப்பத்தை இன்னொருவர் பயன்படுத்துவது குற்றவியல் செய்கை. இது குறித்து நாம் சட்டநடவடிக்கை எடுக்கவும் நேரிடும் - என்றார். (எ-26)

### புலிகளின் போர்க்குற்ற..

சுமந்திரனே உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால், ஐ.நாவுக்கு அனுப்புவதற்காக தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த நாம் ஒரு கடிதம் தயாரித்திருந்தோம். எனினும், இறுதியில் நாம் தயாரித்த கடிதத்தை ஐ.நாவுக்கு அனுப்பவில்லை."

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இரா.சம்பந்தன், ஐ.நாவுக்கு அனுப்புவதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒரு கடிதத்தை எம்.ஏ.சுமந்திரன் எனது மின்னஞ்சலுக்கு கடந்த 3ஆம் திகதி அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில், இருதரப்பும் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனவே, அதுபற்றி நாங்கள் ஆராயவேண்டும். காரணம் இது ஒரு தரப்பு மாத்திரம் களத்தில் இல்லை. மற்றைய தரப்பு அரசு.

இறைமையுள்ள நாட்டை நடத்துகின்ற ஓர் அரசு, தன் குடிமக்கள் மீது போர்க்குற்றத்தை நடத்தியுள்ளது, குண்டுகளை வீசி மக்களை படுகொலை செய்திருக்கிறது, பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்களை அழைத்து அதற்குள் குண்டு போட்டுக் கொலை செய்துள்ளது.

இன அழிப்புப் போர்க்குற்றம் புரிந்திருந்தால் அதில் ஒரு தரப்பு இல்லாவிடின் அதனை எவ்வாறு விசாரிப்பது? கண்முன்னே நடந்த இனப்படுகொலைக்கு அதில் குறிப்பிட்ட விடயம் எங்களுக்கு ஒத்துவரக் கூடியதாக இருக்கவில்லை. அதுபற்றி கடந்த திங்கட்கிழமை ஆராயலாம் என தீர்மானித்த நிலையில், அதற்கு முதல்நாள் இணைய வழியிலான ஒரு கலந்துரையாடலின்போது, "சம்பந்தன் ஐயா, குறித்த கடிதத்தை தான் ஒரு தனிமனிதனாக அனுப்பிவிட்டார்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் கடிதத்தை அனுப்பிவிட்டு இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்றால் எல்லோரும் ஏற்றுக்கொண்டதாகக் கருதமுடியாது. அவர் அனுப்பியிருக்கின்ற கடிதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் இது தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

ஆனால் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த நான், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கொண்ட குழுவினர் இணைந்து ஒரு கடிதத்தை ஐ.நாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். இறுதியில் அது கைவிடப்பட்டது. - என்றார்.

இதேவேளை, மாற்றுக் கடித விவகாரம் குறித்து செய்திகள் வெளியானபோது இதே சிறீதரன் எம்.பி, "எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. அப்படி ஒரு கடிதம் பற்றி ஆலோசிக்கப்பட்டதுதான். ஆனால் அப்படி ஒரு கடிதம் தயாரிக்கப்படவேயில்லை .அதில் நான் கையொப்பம் வைத்ததாகச் சொல்வதும் பொய்யான தகவல்" என்று உதயனுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-6)

### இரட்டைக் ...

உயிரிழந்துள்ளார். அவர் திருமணமாகி 3 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்துள்ளார். இந்த நிலையில், கடந்த 4ஆம் திகதி அவர் மூச்சு விடுவதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார். உடனடியாக அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இந்தநிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தநிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் சுகாதார விதிமுறைகளின்படி அடக்கம் செய்யப்படவுள்ளது. (த-25,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'என்னைக் கேட்காமல் அணித் தெரிவு'

# தலைமைத்துவத்தை உதறினார் ரஷிட்கான்

### ஆப்கான் கிரிக்கெட்டுக்குள் பிளவு



**காபூல், செப். 11**

**ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில், அந்த அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகினார் ரஷிட் கான்.**

அணித்தலைவராக தான் செயற்பட்டு வருகின்ற நிலையில் தன்னைக் கேட்காமலேயே இந்த அணித்தெரிவு அறிவிக்கப்பட்டது என்பதே தனது பதவி விலகலுக்கு ரஷிட்கான் முன்வைத்த முக்கிய காரணமாக உள்ளது.

இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் ரஷிட்கான் நேற்றுமுன்தினம் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார். அதில், 'உலகக்கிண்ணத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணித்தலைவர் என்ற ரீதியில் இந்த அணி அறிவிக்கப்பட முன்னர் என்னுடன் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை கலந்தாலோசித்து இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செயற்படவில்லை.

என்னிடம் ஏதும் கேட்காமல், என்னுடன் ஏதும் கலந்தாலோசிக்காமல்தான் இந்த அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அணிக்குத் தலைவராக இருக்க எனக்கு உடன்பாடில்லை. எனவே உடனடியாக நான் எனது தலைமைத்துவத்தில் இருந்து விலகுகின்றேன். அதேநேரம், ஒரு வீரராக தேசத்துக்கான கடமையை ஆற்றுவதற்குக் காத்திருக்கின்றேன்' என்றார். (ம)



## அரையிறுதியில் ஜோகோவிக்

வொஷிங்டன், செப். 11

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான ஜோகோவிக். நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து இத்தாலி வீரர் பெர்டினி மோதினார். முதலாவது செற்றை 5:7 என்று ஜோகோவிக் இழந்தார். அடுத்த மூன்று செற்களையும் அவர் 6:2, 6:2, 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

கொரோனா ஊடுருவல் காரணமாக

## இந்தியா - இங்கி. ஆட்டம் ரத்தானது

### 2022 நடத்த ஏற்பாடு

லண்டன், செப். 11

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் மன்செஸ்டர் மைதானத்தில் நேற்று நடைபெறுவதாக இருந்த ஐந்தாவது டெஸ்ட் ஆட்டம் கொரோனா ஊடுருவல் காரணமாகக் கைவிடப்பட்டது.

நான்காவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்ற வேளையில் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரிக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் அணியின் உதவியாளர் ஒருவருக்கும் நேற்றுமுன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே ஆட்டம் கைவிடப்பட்டது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி கலந்துகொள்ளவில்லை என்று எடுத்து தொடரை 2:2 என்று முடிக்க வேண்டும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை கோரியது. ஆனால், இந்திய கிரிக்கெட் சபை அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, கைவிடப்பட்ட ஆட்டம் இங்கிலாந்து அணியின் 2022ஆம் ஆண்டின் இந்தியப் பயணத்தின்போது நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





## கோலியை வெறுப்பவர்கள் உற்சாகத்தை வெறுக்கிறார்கள்

### *மைக்கல் வோகன் உச்சபட்ச புகழாரம்*

லண்டன், செப். 11

விராட் கோலியை வெறுப்பவர்கள் உற்சாகத்தை வெறுப்பவர்களாக இருக்கின்றார்கள் என்றுதான் என்னால் தெரிவிக்க முடியும். அதுதான் உண்மையும்கூட என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரான மைக்கல் வோகன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விராட் கோலி மிகச்சிறந்த தலைவர். ஒரு டெஸ்ட் போட்டியில் எப்படி யுக்தி அமைத்து வெற்றிபெற வேண்டும் என்பதை அவர் 4ஆவது ஆட்டத்தில் கிடைத்த வெற்றியின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். விராட் கோலி களத்தில் சரியாக நடந்து கொள்வதில்லை என்று முறைப்பாடு கூறுபவர்கள் உற்சாகத்தை வெறுப்பவர்களாக இருப்பார்கள். விராட் கோலி போன்றவர்கள் கிரிக்கெட்டுக்கு மிகமிக அவசியம். அவரைப் போன்ற ஆள்களால்தான் இந்த விளையாட்டை மேலும் மேலும் ஆர்வமுடையதாக மாற்ற முடியும்-என்றார். (ம)

ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான

## பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டது!

டாக்கா, செப். 11

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ரி20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அணி அண்மையில் நடைபெற்ற ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான தொடர்களைக் கைப்பற்றி அசத்தியது. இந்தத் தொடர்களில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்திய வீரர்களை வைத்தே தற்போது அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணி விவரம், மகமதுல்லா, (தலைவர்), சகிப் அல் ஹசன், முஸ்டபிஷூர் ரகுமான், சவுமியா சர்க்கார், லித்தன் தாஸ், அபிப் ஹசைன், முகமது நமிம், நுருல் ஹசன், சமிம் ஹசன், முஸ்பிகுர் ரகுமான், தஸ்கின் அகமட், மொகமட் சாய்புடின், சொரிபுல் இஸ்லாம், மெஹடி ஹசன், நசும் அஹமட்.

காத்திருப்பு வீரர்கள்: ரூபல் ஹொசைன், அமினுல் இஸ்லாம். (ம)

பணிப்பெண் தேவை
யாழ் நகரை அண்டியபகுதியில் உள்ள வீட்டுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 997 0578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.